# தென்றல்

ஆசிரியர்: கண்ணதாசன்

"போற்றுபவர் போற்றட்டும்
—புழுதிவாரித்
தூற்றுபவர் தூற்றட்டும்;
தொடர்ந்து செல்வேன்!
ஏற்றதொரு கருத்து என(து)
உள்ளம் என்றால்
எடுத்துரைப்பேன் எவர்வரினும்
நில்லேன்; அஞ்சேன்!"


ஆண்டு சந்தா ரூ. 6

ஆறுமாதச் சந்தா ரூ. 3

உள்நாடு (இலங்கை உட்பட) விலை இரண்டணா. | வெளிநாடு மூன்றணா | அலுவலகம்: 'தென்றல்' சென்னை-6

| மலர் 2 | சென்னை | 2—7—55 | சனிக்கிழமை | இதழ் 3 |
|---|---|---|---|---|





கண்ணதாசன் எழுதும்
## ராஜ தண்டனை
பக்கம் 6, 7

ஈ. வி. கே சம்பத் தரும்
## வாழ்வது எப்படியோ?
மோகனஸ்திரம்—கதிரன்



இரண்டாம் ஆண்டு

# மோகனாஸ்திரம்!

( கதிரன் )

நாய் வாங்கி வளர்ப்பதைப்பற்றி குமார் இளங்கோவைக் கலந்து ஆலோசித்தான். வேண்டாமென்று பன்முறை கூறியும் அவன் இளங்கோவின் பேச்சைக் கேட்பதாயில்லை. "நாயைப் போன்ற நல்ல துணையையும் நண்பனையும் வேறெங்கும் காணமுடியாது," என்று உறுதியாய்க் கூறினான். "எல்லோரும் இடுகாட்டை விட்டுப் பிரிந்தபின்னரும், எஜமானனின் கல்லறை மீது அமர்ந்து அழுதுகொண்டிருந்த நாயைப் பற்றியும், பனிப் பிரதேசத்திலே சிக்குற்றுத் துன்பத்துக்காளான மக்களுக்கு உதவிபுரியும் வகையில் பிராந்திபுட்டிகள் கழுத்தில் கட்டப்பட்டுத் தொங்கிய வாறு விரைந்து சென்ற வேட்டை நாயைப் பற்றியும் நீ கேள்விப்பட்டதில்லையா?" என்று வார்த்தைகளை அடுக்கிக்கொண்டே போனான்.

"எல்லாம் நான் கேள்விப்பட்டவைதாம். பிராந்திபுட்டிகளைத் தாங்கிச் சென்றதாக நீ குறிப்பிட்ட வேட்டைநாய் புராண காலவேட்டை நாயாக இருக்கலாம். உன்னைப் பொறுத்த வரையில் நான் நிச்சயமாய்க் கூறமுடியும். வெறுப் புணர்ச்சியை ஊட்டவல்ல கேவலமான ஒரு நாயை வாங்கிவிடுவாய். அதன் எடையைக் காட்டிலும் இருமடங்கு உணவு சாப்பிட்டுவிட்டு, பட்டப்பகலிலே குறும்புக்கார பையன்களால் வாலிலே தகரடப்பா கட்டப்பட்டு வேகமாய் ஓடிச் செல்லும் கழுதையைக் கண்டும் குரைத்திடாது தூங்கிவிழும் நாயைத்தான் நீ அடையப்போகிறாய்."

குமார், மேதாவிபோல் இளங்கோவை அறிவிலிஸ்தானத்தில் வைத்துக் குறுநகை புரிந்தான். "நான் ஜாதி நாய் ஒன்றை எப்படியேனும் பெற்றுக்கொண்டு வரப் போகிறேன். மகாராஜாக்களுக்கு நாய்களை விற்பனை செய்துவந்த ஒருவனுடைய நட்பு எனக்குக் கிடைத்திருக்கிறது."

ஒருவாரம் கழித்து குமார் இல்லத்திற்கு இளங்கோ சென்றபோது அவன் மடியில் ஒரு நாய்க்குட்டி அமர்ந்திருப்பதைக் கண்டான்.

"அது உன்னுடைய நாய்க்குட்டியா?"

"ஆம்; அழகே உருவானதாக விளங்குகிறதல்லவா?"

"நாயின் வாலை எவர் நறுக்கிவிட்டார்?"

"அதுதான் இன்றைய பாஷன் நாய்க்குட்டிகள். அரை டஜனுக்கு மேல் பார்த்துத்தான் இதை வாங்கினேன். வாலுள்ள குட்டிகளைப் பார்த்தேன். வாலிழந்த குட்டிகளையும் பார்த்தேன். வாலில்லாமல் வெகு கம்பீரமாக விளங்கிய கஸ்தூரியைக் கண்டதும் எனதுள்ளம் பாய்ந்தோடி அதனுள்ளத்துடன் இரண்டறக் கலந்துறவாடியது. நீ என்ன கருதுகிறாய்; இதைப் பார்த்ததுமே ஜாதிநாய் என்று கூறிடத் தோன்றுகிறதல்லவா?"

இளங்கோ நாய்க்குட்டியை உற்றுப் பார்த்தான். அழகிகள் போட்டியிலே உலக அழகியைத் தேர்ந்தெடுப்போர் பாவனையில் வெகுநேரம் பார்த்தான்.

"தவளையைவிட இது பெரியதாகத் தோன்றவில்லையே! குமார், இது நாயேயல்ல," என்று தீர்மானமாகக் கூறினான், இளங்கோ.

"என்ன?" என்று கதறி துள்ளிக்குதித்தான் குமார். "நாயல்ல என்று கூறுகிறாய்! நாயைப் பார்த்து நாய் என்று என்னால் அடையாளங் கண்டுகொள்ளமுடியாதா? என்னை அந்தகனென்று நினைக்கிறாய்?"

"நீ குருடனல்ல நண்பா. இது ஓர் பெண்நாய் என்றுதான்சொல்ல வந்தேன்."

"பெண்நாய், நாய் இல்லைபோலும்."

"நான் அப்படியொன்றும் சொல்லவில்லை.

"பின் வேறு என்ன தவறு கண்டுவிட்டாய்?"

"பெண்நாயை வளர்ப்பதில் சில தொல்லைகள் நடைமுறையில் தோன்றும்."

"அவை யாவையோ?"

"காலம் தெரிவிக்கும்; பொறுத்திருந்து பார்."

"பெண்நாய் குரைக்காதா; கடிக்காதா? எஜமானனிடம் ஆண் நாயைவிட குறைந்த அளவு விசுவாசத்துடன் தானிருக்குமா?"

"அப்படியல்ல!"

"பின் என்னதான் சொல்லேன்."

"பொறு தம்பி பொறு; பின்னால் தெரியவரும்," என்று இளங்கோ கூறிவிட்டு நழுவினான்.

மாதங்கள் சில கழிந்த பின்னர் குமார் பெரிய பூனையளவு வளர்ந்திருந்த கஸ்தூரியைக் கையிலேந்தியவண்ணம் இளங்கோவினில்லம் சென்றான். நண்பனைக் கண்டதும், "ஆயிரம் நாய்களிலே இது ஒன்று என்று எண்ணிவிடாதே. 'சூ' சொன்னாலேபோதும், உன் கழுத்தை நோக்கிப் பாயும்" என்று பெருமை பேசினான் குமார்.

"அப்படியானால் 'சூ' சொல்லாதே, தம்பி," என்று கடுமையாகக் கூறினான் இளங்கோ.

"இதற்குள்ளாக என்னைக்கண்டு பொறாமை கொண்டுவிட்டனர் அண்டை அயலார். இன்றுவரை ஆறுபேர் என்னை வேண்டிக்கொண்டிருக்கின்றனர்."

"எதற்காக?"

"குட்டிகளுக்காக. இது ஒரு பெண் நாய் என்பதால் நிச்சயம் சில குட்டிகள் பிறக்கும். அண்டை வீட்டுக்காரர் இருவரும், நண்பர்கள் மூவரும் இதற்குள்ளாக மனு செய்துள்ளனர். உனக்கு ஒன்று வேண்டுமா?"

நாயைக் கண்டு நகைத்த இளங்கோ "இச்சிறு பிராணி அதிகமாக உன் ஆசையைக் கிளறிவிட்டு விட்டதே. நீ ஐந்து குட்டிகளை தானம் கொடுத்த பின்னர் நான் ஆறாவது குட்டியை, ஜனிக்கும் போது உன்னிடமிருந்து பெற்றுக் கொள்கிறேன்," என்று பதில் கூறினான்.

"நல்லது. பெண்நாயை வளர்ப்பதிலே எவ்வளவு நன்மையிருக்கிறது பார்த்தாயா. என்னைப் பலர் கண்டு பேச வந்துவிட்டார்களல்லவா? ஆண்நாயை வளர்த்திருக்கும் பட்சத்தில் 'குட்டியொன்றுதா' என்றுயார் என்னைக்கேட்டிருப்பர்!"

"நீ விரும்பாத வகையில் கூடிய சீக்கிரமே வேறு இனத்திலிருந்து உன்மீது கவனம் செலுத்தப்படும்" என்று மெதுவாகக் கூறினான் இளங்கோ.

சில நாட்கள் கழித்து இளங்கோவும் குமாரும் சந்தித்தனர். இங்கோ மெதுவாகக் கூறியது வீண்போகவில்லை. குமார் தொங்கிய முகத்துடன் காணப்படவே அவன் விகாரம் யாது என வினவினான்.

"எல்லா விகாரமும் நாயைப் பற்றித்தான்."

"உடல் நலிவா?"

"இல்லையில்லை. ஒரு பெரிய பிரச்சினையைத் தீர்க்க முயற்சி எடுத்தும் வெற்றிகிட்டாமலிருக்கிறது. கஸ்தூரி உயர் ஜாதிநாயாய் இருக்கிற காரணத்தால் அதற்கு ஆண்துணை தேடுவது சிரமம் தரக்கூடியதாயுளது. நல்ல உயர்ஜாதி ஆண் நாய் எங்கு கிடைக்குமென்று தெரியாமல் திண்டாடுகிறேன்."

"உன்னிடத்தில் மனுபோட்டவர்கள் அவசரப்படுத்துகிறார்களா?"

"என்னை என்ன ஏமாளியென்று கருதிவிட்டாய். மனுபோட்டவர்கள், அவசரப்படவில்லை. அவர்கள் காத்திருக்கத் தயார். அசிங்கமே உருவான தெருநாய்களின் தொல்லை தாளமுடியவில்லை."

இளங்கோவின் ஏளனச் சிரிப்பைக் கண்டும் பொருட்படுத்தாமல் குமார் மேலும் கூறினான். "சமீப காலத்தில் என் வீட்டினருகிலேயே சில தெருநாய்கள் விட்டுக்குள் கண்ணோட்டம் செலுத்தியவாறு அலைந்து கொண்டிருக்கின்றன. அதைவிட விகாரம் தரக்கூடிய விஷயம் கஸ்தூரியைப் பற்றியது. உயர்ஜாதி நாயான கஸ்தூரி, தெருநாய்களின் நடமாட்டத்தை வெறுப்பதாகத் தெரியவில்லை. எனவே, அதை அறைக்குள்ளேயே வைத்துக் கண்ணுங்கருத்துமாய் கவனித்து வருகிறேன்."

"மகா புத்திசாலி. எதற்கும் ஜாக்கிரதையாகவே இரு. தெருநாய்கள் கலப்படப் பிறவிகளேயானாலும் மிகவும் பொறுமைசாலிகள்; அதோடன்றி அவை நிரம்ப தந்திரம் படைத்தவை. ஆகவே, உன் கண்களையே ஏமாற்றிவிட்டுத் தங்கள் காரியத்தை முடித்துக் கொள்ளலாம்."

"கஸ்தூரியை அவைகளில் ஏதேனும் ஒன்று நெருங்கினால் அவை யாவற்றையுமே பொடியாக்கிவிடுவேன். அதை மட்டும் நீ மறந்துவிடாதே," என்று குமார் வெகுண்டு கூறி அகன்றான்.

இளங்கோவும் குமாரும் மறுமுறை சந்தித்தசமயம் நண்பனுடைய முகத்தைக் காண இளங்கோவிற்குப் பரிதாபமாயிருந்தது. கண்களை இமைகள் காப்பதுபோல கஸ்தூரியைத் தெருநாய்களிடமிருந்து காப்பாற்றிட எடுத்துக்கொண்ட முயற்சியின் காரணமாய் அவன் கண்களைச் சுற்றி வளையங்கள் படர்ந்திருந்தன.

"இப்பொழுது என்னப்பா விகாரம்?" என்று குமாரின்தோள்களைத் தட்டியவாறு வினவினான் இளங்கோ.

"இந்தத் தெருநாய்களின் தொல்லை சகிக்க முடியவில்லை. இந்த நகரத்தில் இவ்வளவு தெருநாய்கள் இருக்குமென்று நான் கனவிலும் கருதவில்லை. தெருக்கதவைத் திறந்தவுடனே நான், கரிய பெரிய குரூர ஆண்நாய் காத்துக்கிடப்பதைத்தான் காண்பேன். ஓரிரு நாய்கள் இலேசாகக் கதவைத் தட்டவும் செய்கின்றன. வெளியிலே நாய் உறுமும் சப்தம் கேட்டால் கஸ்தூரிபடுத்திருக்கும் நிலையிலிருந்து எழுந்துஆவலுடன் நின்று பார்க்கும். அதற்குக் கொஞ்சமேனும்மானமோ, சூடோ, சொரணையோ, ரோஷமோ இருக்கும் பட்சத்தில் தெருநாய்களின் காமவெறி உறுமலை சட்டை செய்ய வேண்டியதில்லை. ஆனால், அதனுடைய பார்வையிலே ஏக்கத்தை, கலவி ஆசையைக் காண்கிறேன். அப்போது அதை செம்மையாக உதைக்கலாமா என்று தோன்றும். தெருவிலே ஆண்நாய் ஓடும் சலசலப்பைக் கேட்டவுடனே கஸ்தூரி வாலையன்றோ ஆட்டுகிறது. இன்னொரு வேடிக்கை என்ன தெரியுமோ; என்னிடம் குட்டிக்காக மனு செய்தவர்கள் ஆண்நாய்க் குட்டிதான் தேவையென்று கூறிவிட்டார்கள். முதல் முறையில் கஸ்தூரிக்கு ஒரு ஆண்குட்டியும் இரண்டு பெண்குட்டிகளும் பிறக்கின்றன என்று வைத்துக்கொள்வோம். ஆண்குட்டியைப் பரிசாக அளித்துவிட்டால் மிச்சமுள்ளது என்னிடத்தில் மூன்று பெண்நாய்கள். இந்த ரீதியிலே குட்டிகளைப் பெற்றெடுத்திடின், அதே மாதிரி கஸ்தூரியின் குட்டிகள் தங்களின் சக்திக்கேற்றவாறு பெண்குட்டிகளைப் பெற்றெடுத்திடின் சில ஆண்டுகளுக்கப்புறம், என் வீட்டிலே நூற்றுக்கணக்கான பெண்நாய்கள் துள்ளி விளையாடிடுமே. அவற்றின் மோகனாஸ்திரத்தால் தாக்குண்டு தெருவிலே என் வீட்டெதிரிலே ஆயிரக்கணக்கான ஆண்நாய்கள் ஆரவாரம் செய்திடுமே. ஒரு டஜன் ஆண்டுகளில்..."

(10ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்கனின் ஜம்பம்

சுவிட்சர்லாந்தைச் சுற்றிப் பார்க்கச் சென்றிருந்த ஒரு அமெரிக்கனுக்கு நாள் முழுவதும் அந்நாட்டின் இயற்கையழகையும் பிற எழில்களையும் காண்பித்துக்கொண்டுவந்த வழிகாட்டியொருவனுக்கு மனநிம்மதி சிறிதேனும் ஏற்படவில்லை. அமெரிக்கன் எந்தக் காட்சியைக் கண்ணுற்றபோதும் 'பேஷ்' என்று சொன்னானில்லை. அவனுடன் இருந்த பிறநாட்டார் எழில் மிகுகாட்சிகளைக் கண்டு உவகை யெய்தினார்கள். அமெரிக்கனைப்போலல்லாமல் அவற்றிலே அவர்கள் லயித்துவிட்டதைக் கண்ட வழிகாட்டிக்கு அவன்மீது வெறுப்புத்தான் ஏற்பட்டது.

யாத்ரிகனை எப்படியாவது 'குஷி'ப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் லாசேன் ஏரியிலிருந்து ஆல்ப்ஸ்மலைமீது கண்ணோட்டம் செலுத்தச் சொன்னான். அது உள்ளபடியே மிக ரம்மியமானதோர் வர்ணஜாலக் காட்சி என்பதாலே எவருமே அதில் மயங்கிவிடுவரென்பது வழிகாட்டியின் நினைப்பு.

"இந்தக் காட்சியைப்போல் எழில்மிக்க பேறொன்றை இதுவரை எங்கனும் என்றேனும் கண்டதுண்டா?"

"நான் உறுதியாக சொல்லுவதற்கில்லை. உங்கள் தேசத்து ஏரிகளையும், மலைகளையும் நீக்கிவிட்டுப் பார்த்தால் மிச்சம் உங்களிடம் உள்ளது என்ன?" என்றான் சுலபத்திலே திருப்தியடையாத ஆணவக்கார அமெரிக்கன்.

# எண்ணம்

## கண்ணதாசன்

சிலருக்குச் சில நேரங்களில் 'மன அரிப்பு' ஏற்படுவதுண்டு. அதிலும், ஏதேனும் ஒரு பதவியில் இருந்துகொண்டு. அதைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும் என்று கருதுகிறவர்களுக்கு அந்த அரிப்பு தினசரி ஏற்படுவதுண்டு. அப்போது அவர்கள் ஏதேனும் ஒன்றைச் சொல்லி, எசமானரைத் திருப்திப் படுத்தவேண்டும் என்று பேராவல் கொள்வதுண்டு. இந்த நிலையில் உள்ள ஒருவர் நேற்றுத் திருவாய் மலர்ந்துள்ளார். இவர் ஒரு அமைச்சர். பெயர் சுப்ரமணியம். அவர் சொன்னது இது.

"வடநாட்டுக்கே மத்ய சர்க்கார், நிறைய செலவு செய்கிறார்கள் என்பதும், தென்னாட்டைப் புறக்கணிக்கிறார்கள் என்பதும் மிகவும் தவறான குற்றச்சாட்டு. அதிகாரப் பூர்வமாகத் தெரிந்ததைச் சொல்கிறேன். எல்லா மாகாணங்களையும் வடநாட்டுத் தலைவர்கள் சமமாகத்தான் பாவிக்கிறார்கள். அனாவசியமாக நாம் குற்றம்சாட்டினால் நம் மீது அவர்களுக்குள்ள அனுதாபம் போய்விடும்."

சமமாகத்தான் பாவிக்கிறார்களாம். எவ்வளவு ஆதார பூர்வமான பேச்சு பாருங்கள். இந்த ஆதாரம் அவரது பதவிக்கு-தொழிலுக்கு - ஆதாரம்! நேர்க்காட்சி நிலைமைக்கல்ல! நேர்க்காட்சி நிலையே வேறு அதை ஐந்தாண்டுத் திட்ட - அபிவிருத்தித்திட்ட குறிப்புகள், அறிவு கெடாமலிருப்பவர்களுக்கு அடித்தடித்துச் சொல்கின்றன. பெரும்பாலான திட்டங்கள் வடக்கேதான் போடப்பட்டுள்ளன. இங்கே உள்ள ஆரியர்கள்-காங்கிரஸ் தியாகிகள்-அத்தனை பேர்களது கண்களிலும் கனல் பிறக்கும் அளவுக்கு அக்கிரமத் திட்டமாக அது அறிவிக்கப்பட்டிருக்கிறது. மித்திரன் கார்ட்டூன்-அம்புசத்தம்மாளின் அமுத்தலான சாடைப்பேச்சு-இதே சுப்பிரமணியத்தின் லேசான ஒப்பாரி-இவ்வளவும் சில தினங்களுக்குமுன் திராவிட சமுதாயத்தின் கண்களையும் காதுகளையும் மோதியதை யாரும் மறந்திருக்கமுடியாது. அப்போது, "வடநாடு இப்படியே நிலைமையை நீடிக்க விடுமானால், மோசமான அரசியல் விளைவுகள் ஏற்படும்." என்று நடுங்கிய கையிலேயே 'குண்டு' தூக்கிய சுப்பிரமணியம், திடீரென்று விழித்துக்கொள்கிறார். "சேச்சே! நானா அப்படிப் பேசினேன்" என்று கண்களைத் துடைக்கிறார். புத்தியிலே ஏறியிருந்தமெருகைக் கலைக்கிறார். பழைய பாசத்தை ஏற்றுகிறார். 'எல்லாம் இன்பமயம்' பாடுகிறார். எசமான விசுவாசத்தை வெளிச்சம் போடுகிறார். வாலைக் குழைக்கிறார். நன்றி காட்டிக் கொள்கிறார். அதோடு திருப்பி, நம்மைப் பயமுறுத்தவும் செய்கிறார். வடநாட்டார் நம்மீது வைத்திருக்கும் அனுதாபம் போய்விடுமாம்! கொட்டியளந்து, வரியாவையும் கொடுத்துக்கொண்டே இருக்கிறோம். வடக்குக்குக் கருமாதிக் காசாய்ப்போவதிலே திரும்புவதோ, 'புகைவிலக்கு ஆகாது!' இங்கிருக்கும் பொக்கிஷமோ இளிச்சவாயனின் பணப்பெட்டி! இருக்கின்ற மந்திரிகளோ முதுகெலும்பை எடுத்து வைத்துவிட்டு 'வீரநடை' போடுகிறவர்கள் - தென் நாட்டு நிலைமையோ, நாளுக்குநாளதிகம் நகர்ந்ததடி அம்மானை! இவ்வளவையும் அழுது தொலைப்பதோ ஏகஇந்தியா என்ற ஏமாளிப்பாட்டுக்காக! வாங்குகிற பணத்தையெல்லாம் ஒருவழி வரவாக்கி வடதிசைக் கொள்ளைக்காரர்கள் விநியோகிப்பதோ தாங்கள் வாழ-தங்கள்குலம் வாழ-தங்கள் திசை வாழ! இதிலே அவர்கள் நம்மீது அனுதாபம் வைத்திருக்கிறார்களாம்! அது போய்விடாமல் இந்த மகா மந்திரி கயிறுபோட்டுக் கட்டி இழுக்கிறாராம்! மூளையை முழுக்க இழந்தவர்களைத் தவிர வேறு யார் இப்படிப் பேச முடியும்!

"இதோ! நான் தருகிறேன் உனக்கு, என் சொத்து முழுமையும். நீ என்மீது அனுதாபம் காட்டு. அது போகாமலும் நானே பார்த்துக்கொள்கிறேன்" என்று யாராவது சொன்னால் நாம் என்ன செய்வோம்! கீழ்ப்பாக்கத்துக்கு டெலிபோன் செய்து வண்டியை வரவழைத்து அவரை ஏற்றி அனுப்புவோம்! என்னவோ நிதியமைச்சர் இன்னும் வெளியிலேயே இருக்கிறார்! அவர் செய்த பாக்கியம்.

காங்கிரஸிலே இருக்கும் புத்தியுள்ள சில தோழர்களை நான் கேட்டுக்கொள்கிறேன். எப்படியாவது ஒருமுறை ரயிலேறி வடநாட்டிக்குச் சென்று வாருங்கள். அங்கே பாருங்கள்-வாழும் வகையைப் பாருங்கள்-வாழ்க்கை வசதியைப் பாருங்கள். ஆலைப்புகையைப் பாருங்கள் - ஆட்டங்களைப் பாருங்கள்-வானளாவிய மாளிகைகளைப் பாருங்கள்-வடிகட்டிய முட்டாளுக்கும் ஏற்படும் வசதிகளைப் பாருங்கள்! எப்படிக் கிடைத்தது இந்த வாழ்வு? எங்கிருந்து வந்தது, இவ்வளவு வசதி? ஏகஇந்தியாவையும் ஒரே நிலையில் வெள்ளையன் விட்டுப்போக இப்போது இரு வேறு நிலை பிறப்பானேன்? வடக்கு வாழ்வானேன். தெற்கு தேய்வானேன்! வகுப்புக் கலவரமும் வெள்ளமும் புத்திப்பஞ்சமும் சுற்றிச் சூழ்ந்த வடக்கு-

அது ஏதும் வராத தெற்கு-

நன்செய், புன்செய், உழைக்கும் கைகள் அதிகம் பெறாத வடக்கு-

யாவும் படைத்த தெற்கு-

அது மேலே மேலே......

இது கீழே கீழே......

காரணம் என்ன? வடநாட்டான், தனது வாணிபத்தலமாகவேதான் தெற்கைக் கருதுகிறான்: இங்கிருக்கும் அமைச்சர்களைத் தனது "கூலி ஏஜண்டு'களாகக் கருதுகிறான்! 'ஏஜண்டு'கள் கடமையை உற்சாகமாகச் செய்கிறார்கள்' சுப்ரமணியம் போன்ற பெரிய ஏஜண்டுகள் புத்தியைச் சுத்தமாகக் கழற்றிவிட்டு வேலை செய்கிறார்கள்! அவன் வாழ்கிறான்-நாம்சாகிறோம்.

இந்த நிலையை நீடித்துக் கொண்டே போக 'ஏஜண்டு'கள் விரும்புகிறார்கள். அதற்காகவே எதிரிலிருப்போரை இளிச்சவாயர்களாகக் கருதி உளறிக் கொட்டுகிறார்கள்! தென்னாட்டிலே - திராவிட சமுதாயத்தின் முன்னுள்ள ஒரேவழி - வடக்குத் தொடர்பைத் தகர்த்து-தனது நாட்டைத் தானாள்வதுதான்! அமைச்சர்களை நம்புதல் அணுவளவும் பயன் தராது! அவர்கள், அமைச்சர்களல்ல; 'கூலி ஏஜண்டுகள்.'

◉


## செப்டம்பரில்!

தென்றல்-திரை

சிறப்பு மலர் செப்டம்பரில் வெளிவர இருக்கிறது.

விலை ரூ. 1.

மூவண்ண முகப்பு--முற்றிலும் திரை ஓவியங்கள்

★

ஜூலை 15க்குள் முன்பணம் கட்டுவோருக்கே மலர் தயாரிக்கப்படும்.





அடுத்த இதழில்:

## குமாரி கோமளம்

காரை முத்துப்புலவர் தரும் காதற் கதை.

# வாழ்க வன்கணாளர்கள்!

# கொள்ளிவைத்த தில்லி 'திரு' நகரம்

என் இதயவிளக்கே, இன்னுமா நீ வந்து சேரவில்லை! திருமணமான மறுமாதமே புறப்பட்டு வந்தேனே! என் உயிர்ச்சிலையே! உன் அத்தான் தலைநகரில் தன்னந்தனியனாய் அவதிப்படுகிறேன். அன்னமே! கடிதம் எழுதி பத்து நாட்களாகிவிட்டனவே! முகவரி தெரிவித்திருந்தும், உன் ஆசை முகத்தைக் காட்ட பத்துநாட்கள் போதவில்லையா! உன் சந்திரபிம்ப முகத்தைப் பார்க்குமுன் நான் சடலமாகிவிட்டால்! நோயின் தாக்குதலுக்கு என் உயிர் பலியாகி, நான் சேகரித்து வைத்திருந்த ஆசையெல்லாம் செத்துவிட்டால்! உன் நீலக்கருவிழியில் என் உருவத்தைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேனே... அந்தநாள் இனி வராதா? காட்டுமுல்லை தொங்கிய உன் நீண்ட கருங்கூந்தலை அன்றொருநாள் இன்ப நிலா கொலுமண்டபம் புகுத்த காலை நுகர்ந்து பார்த்தேனே அந்தநாள் - அன்றோடு ஒழிந்த நாளா? தங்கப்பதுமையை தாயகத்திலே விட்டுவிட்டு தமிழிளைஞன் தில்லியிலே துடிக்கிறேன். என் உள்ளம் தும்பைப்பூ என்று என் அன்னை அடிக்கடி சொல்லுவார்களே, எனக்கா இந்த உடல் வேதனை-எனக்கா இந்த மனதடக்கச் சோதனை! இன்பவிளக்கே, இல்லறச்சுடரே, என்பக்கம் நீயிருந்தால், புண்பட்ட என் உள்ளம் பண்பட்டுப் போய்விடும் துணைப் பறவையே! படித்துப் பட்டம்பெற்ற மருத்துவ மேதைகளால் செய்ய முடியாத மூலிகை உனது ஸ்பரிசத்தில் இருக்கிறது இன்பச்சுனையே! நீ எப்போது வருவாய் என்று ஏங்கிக்கிடக்கிறேன்; மேகமண்டலம் கண்ணுக்குத் தெரிந்தால் தென்திசையிலிருந்துவரும் பறவைகளை நோக்கி கேட்டிருப்பேன் 'வழியிலே என் மனையாளைக் கண்டீர்களா?" என்று. அதுவும் முடியவில்லை மலர்க்கொடியே! என்னைச் சுற்றிலும் மருந்துப்புட்டிகள். இதயத்தைக் குலுக்கும் கூர்மையான ஆயுதங்கள்! அவைகளுக்கு என்ன தெரியும் உன்னைப்பற்றி! உடலைக் கிழிக்க உதவிபுரியத் தெரியும்; உள்ளத்தை அறியும் சக்தியேது?

நீ செலவுக்கு முடைப்படுவாய் என்று எனக்குத் தெரியும். அதற்காகத்தான் பணமும் அனுப்பினேன்; போதாவிட்டால் கட்டிய தாலியை விற்றுவது வந்துசேர் என்று உரிமையோடு எழுதியிருந்தேன், நான் கட்டிய தாலி என் பொருட்டு அழிந்தால் என்ன? தமிழகத்தில் தாலிகள், போனால் வராத அதிசயப் பொருள்களா? இல்லையே! பத்துநாட்கள்! பணமில்லாத பராரிகூட சென்னையிலிருந்து கால்நடையாக டில்லி வந்திருக்க முடியுமே! நீ வரவில்லையே-என் செய்வேன்! வயிற்றுக்கடுப்பு என் உள்ளத்தை சல்லடையாக்கிவிட்டது. உடலின் கனம் அதிகரிக்க அதிகரிக்க, உயிரின் எடை குறைகிறதே! செத்துப் போகலாமென்றால் அதற்கும் வழியில்லை. 'பட்டம் பெற்ற சித்தர்'கள் அதற்கும் வழிசெய்ய மறுக்கிறார்கள். மருத்துவர்களின் வெற்றி நோயாளிகளின் மனச்சாந்தியையும் பொறுத்ததுதான் என்றால், 'நானே வெற்றி தருகிறேன் எங்கே பாஷாணம் எனக் கேட்டால் அவர்கள் கொடுக்கத்தானே வேண்டும். இதுவும் எனக்கொரு ஆத்ம சாந்திதானே. இது மருத்துவர்களின் 'பிரத்தியேக அன்பு' போலும்!

இன்று உனது வருகையை எண்ணி ஏமாந்த வேதனை ஒரு பக்கம்; வழக்கமாக வரும் டாக்டர் வராததால் வயிற்றுக்கடுப்பின் உச்சநிலை வேறொரு பக்கம். எங்கே டாக்டர் என்றால், தெருவிலே ஒரு பெண் இறந்துகிடந்தாளாம் அது, கொலையா, தற்கொலையா என்று பரிசீலிக்கப் போயிருக்கிறார் என்கிறார்கள். டில்லி, டாக்டர்களைப் பற்றி யாருக்குத்தான் தெரியாது! பார்லிமெண்ட உறுப்பினரின் மயக்கம் தீர்க்க, அவர் பிணமான பின்னும் போகாத குணாளர்களாயிற்றே டில்லி டாக்டர்கள்! நான் எம்மாத்திரம்? சாமானியன்-அதுவும் தமிழ்நாட்டுக்காரன். சாகப் போகிறவனைக் காப்பாற்ற வக்கு வகையற்றவர்கள், செத்துப்போனவளைப் பற்றி ஆராய்ச்சி நடத்தப் போயிருக்கிறார்கள். அவள் காரணமில்லாமலா தற்கொலை செய்துகொண்டிருப்பாள். ஐயோ! வலி பொறுக்கமுடியவில்லையே! தமிழணங்கே! தலைகவிழ்ந்து மலர் மாலை ஏற்றவளே! எங்கே இருக்கிறாய் நீ! ஒருமுறை உன் முகத்தை...???

★

அத்தான்! அழகு மிகக் கொடிது அத்தான்...எந்த 'அழகு' தங்கள் பக்கம் இருக்கவேண்டுமென்று துடித்து எழுதினீர்களோ, அந்த அழகுதானத்தான் உங்களைச் சந்திக்க விடாமல் தடுத்துவிட்டது. அத்தான்....என்னை எதிர்பாத்து எதிர்பார்த்து ஏங்கியிருப்பீர்கள்; 'வந்துவிடுவாள், வந்துவிடுவாள்' என்று உங்கள் நெஞ்சு புலம்பியிருக்குமே! இதயராஜாவே, என் இன்பக்காவலரே, துடித்தேன்; துவண்டேன். கடிதம் கண்டதும் காற்றாய் பறந்தோடி வந்தேன். முடியவில்லையே அத்தான்!

ஆசை பொல்லாதது என்பார்கள். உண்மைதான் - பேராசை பெருநட்டம் என்பார்கள் - மெய்தான். ஆனால், எனக்கு எழுந்த ஆசை ஆசையுமல்ல; பேராசையுமல்லவே அத்தான்! பிரிந்திருந்த கணவனை ஓடிவந்து பார்க்க எத்தனிப்பது பேராசையா? ஆசை மிகுதியால்தான் நான் அழிந்துபட்டேன் என்றால் இந்த உலகத்தில் குடும்பவிளக்குகள் எரியக் கூடாது அத்தான்!

வியாழனன்று கடிதம் கிடைத்தது. திடுக்கிட்டுப்போனேன்; 'தில்லிக்கா போகவேண்டும்' என்று அல்ல, ஓராண்டு காலத்திற்குள் தாலிச்சங்கிலி தேய்ந்துவிட்டதோ என்ற அச்சத்தால் - வாழ்வின் மீதுள்ள நம்பிக்கையால்.

வெள்ளி காலை 'கிராண்ட்ரங்க்' எக்ஸ்பிரசில் புறப்பட்டேன். மணாளனைப் பார்க்கப்போகிறோமென்று என் உள்ளம் மானாகத் துள்ளவில்லை; மயிலாக ஆடவில்லை. தேனாக ஓடி, என் தேகமெல்லாம் சுவைகொட்ட, எனக்குக் கிடைத்த சேதி இன்பச் சேதியா? 'வா கண்ணே, புறப்பட்டுவா, வடநாட்டின் சரித்திரப் புகழ்பெற்ற தாஜ் மஹாலைப் பார்ப்போம். அந்த அழகு மாளிகை நம் உள்ளங்களிலே இன்பநீர் பாய்ச்சட்டும்" என்று எனக்குக் கடிதம் வந்தது! "ஓடிவா! ஓடிவா! நான் மரணவாசல் புகப்போகிறேன்; மருத்துவத்தால் முடியாத சக்தி உன்னிடமிருப்பதாக உணர்கிறேன்; ஊர்வசியே! ஓடிவா, என்னைக் காப்பாற்று, மரண மாளிகையின் கோட்டைக்கதவுகளைமூடவேண்டும்! கிளம்பு!" என்ற சோகச்செய்தியல்லவா எனக்குக் கிடைத்தது!

மறுநாள் இரவு ஒன்பது மணிக்கு டில்லி சேர்ந்தேன். கடிதத்திலும், தந்தியிலும் குறிப்பிட்டிருந்த சிகிச்சைசாலை எங்கிருக்கிறது என்று விசாரித்தேன். டில்லி நகருக்குள் நான் ஏறிவந்த பஸ்ஸின் கண்டக்டர் வழிகாட்டுவதாகச் சொல்லி எங்கோ அழைத்துச் சென்றான். அன்பாகப் பேசுகிறானே, பண்புள்ளவன்தான் என்று எண்ணினேன்; பெருமைப்பட்டேன்; 'வடநாடு, வடநாடு' என்று தூற்றும் 'தென்னாட்டுத் தலைவர்'களைக் கூட அப்போது திட்டத்தான் செய்தேன். ஆனால், அடுத்த கட்டம்? அந்தக் கண்டக்டர் பஸ் நிலையத்துப் பக்கம் என்னை அழைத்துச் சென்றான்; அப்போது மணி பன்னிரண்டு! மோட்டாரை விட்டிறங்கிய பிறகு மூன்றுமணி நேரம் நடந்திருக்கிறோம். எத்தனை மைல்களோ? சித்தம் கனமேறிப் போயிருக்கும்போது எப்படி கணக்கிட முடியும்?

அந்த கண்டக்டர் ஒரு அதிசய மனிதன்தான்! இயந்திரமில்லாத மோட்டார் ஓடாதுதான்; எண்ணையில்லாத விளக்கது எரியாதுதான்; ஆனால் இருதயமில்லாத மனிதன்? அதனால்தான் அவனை—அந்தக் கண்டக்டரை அதிசய மனிதனென்றேன். அவனுக்கு இருதயமில்லையல்லவா? ஆனாலும் வாழ்கிறானே அதனால்! நான் ஒரு தமிழ் பெண் என்பதும் அவனுக்குத் தெரியும்; வழிநெடுக என கதையையும் சொல்லியிருக்கிறேன்; என்றாலும் அவன்...?

தமிழ்ப் பெண்களின் உயிர் மற்ற பெண்களின் உயிரைப்போன்றதே என்று வடநாட்டுக்காரர்கள் எண்ணியிருக்கிறார்கள். ஒரு சிலரது உயிர் கற்பிலும், ஒரு சிலரது உயிர் கணவனின் உயிரிலும் கலந்திருக்கிறது என்பதை வடவர்கள் இன்னும் புரிந்து கொள்ளவில்லை. அந்தப் பாவி அதுவரை, அழகான பெண்களையே கண்டிராதவனைப் போல நடந்து கொண்டு விட்டான்; பஞ்சவர்ணக் கிளியைக் கண்ட பசியுள்ள கரும்பூனையாகி விட்டான். இடமோ, துர்நாற்றம் படிந்த இடம்! இதயமோ தில்லியின் மூலை முடுக்கெல்லாம்! ஆனால் உடலோ அந்த 'மனித மிருகத்தின்' இரும்புப் பிடியில்! ஆம்; தமிழச்சி கெட்டுவிட்டாள்; இல்லை; கெடுக்கப்பட்டாள். தெளிந்த நீரோடை போன்ற உள்ளத்தைக் கலக்கி சாக்கடையாக்கி விட்டார்கள் அந்தச் சண்டாளர்கள். ஆம்; அடுத்தடுத்து என் உள்ளத்தைக் கலக்கி எப்படியோ, சேறாக்கி, கூழாக்கி, அந்தச் செம்மேனியர் சிரித்து மகிழ்ந்தார்கள். எனது கூச்சல் கேட்டு ஓடி வந்த போலீசார்கூட தயங்கிப் போனார்கள்! அப்போது என்னால் பேசவே முடியவில்லை. காப்பாற்ற வந்த அந்த 'வீரர்'களும் அந்தத் துரோகிகளின் கூட்டத்தில் சேர்ந்து கொண்டு கடைசிமுறையாக என்னை அலங்கோலம் செய்து, என் உயிரையே அதோடு பிடுங்கிக்கொண்டு ஓடிவிட்டார்கள். இதற்கெல்லாம் காரணம் தமிழ் மண்தான். தமிழ் மண்ணில் பிறந்த நான் அழகாயிருந்த குற்றத்தின் விளைவு இது. அழகுதரும் சக்தி, என்னோடு தமிழ் மண்ணுக்கு அழிந்து போகட்டும்! அத்தான் இனி உங்களைப் பார்க்கமுடியாது; பார்க்க வந்த உங்கள் துணைவி செத்துப் போய்விட்டாள். நான் போகிறேன் அத்தான்! எதிரிநாட்டு மண்ணில் சாய்ந்து விட்டேன்; ஆனால் எப்படியோ என்னை எரிக்கும் சுடுகாட்டிலேயே தங்களையும் எரிக்கும் நிலையை உண்டாக்கி விட்டேன்; இந்த ஆசைமட்டும் நிறைவேறிவிட்டது. டெல்லி வாழட்டும்! அந்தத் தலைநகரம் தாங்கி நிற்கும் வன்கணாளர்களும் வாழட்டும்!!

★

டில்லியிலிருந்த கணவனைக் காணச்சென்ற தமிழ்ப்பெண்ணை டில்லியில் சில வெறியர்கள் சற்பழித்த மிருகச் செயலின் எதிரொலி இந்தக் கட்டுரை.

◉

# கோலேந்திகள் குடியிருக்கும் தேசத் தலைநகரமா?

# தோழர் கடவுள்!

"சிறு சொல்"...

"அந்தச் சின்னஞ் சிறிய சொல்லை—முதன் முதலில் சொல்லீய அவன், "மனித இனத்தின் முதல் கோழை"...

"அல்ல...அப்படி அல்ல...சரிதம் கண்ட முதல் மனிதன்."

"கடவுள்"--சிறு சொல்...

அந்தச் சொல்லை--முதன் முதலில் சொன்ன, அந்த பெயர் தெரியாத மனிதனைப்பற்றிய பேச்சு, மேலைநாட்டு ஆய்வுக்கூடத்தில், அறிஞர்களின் மையத்தில்...இந்த முறையில் எழுந்துள்ளது. அவர்களின் எண்ணங்கள்--அத்த எண்ணங்களினால், பிறந்த எண்ணற்ற ஏடுகள், அதிலே ஓர் முடிவு காண, விளக்கம் கூறிப்போகின்றன. விளக்கம்--அந்தச் சொல்லை--கடவுளை--பற்றியல்ல...அதை முதலில் ஒலித்த அந்த 'தடித்த' உதடுகளைப் பற்றி...

அங்கே, கடவுள் நிலையை தாண்டி விட்டார்கள். அதிலே ஓர் முடிவிற்கு வந்துவிட்டார்கள்; அதனால், இன்று அந்த சொல்லைக் கூறிய, அந்த முதல் மனிதனைப் பற்றிய, ஆராய்ச்சியில் ஈடுபட்டு, முடிவுகாண முயலுகிறார்கள்.

ஆனால் இங்கோ...

"மனிதன் தான் -- கடவுளைப் படைத்தான." மனிதனால் ஒரு சிறிய புழுவைக்கூட உண்டாக்க முடியவில்லை; ஆனால், எண்ணற்ற கடவுளைப் படைத்துவிட்டானே!"

"எந்த மண்ணிலே பிறக்கிறதோ...அந்த மண்ணின் தன்மைதான், அந்தக் கடவுளுக்கும், இருக்கும். எத்தகைய மனித இனத்தில் அது பிறக்கிறதோ...அந்த மக்களின் கலாச்சாரம்தான், அந்தக் கடவுளுக்கும் இருக்கும்"...

"முட்டாள்களையும் மூடர்களையும் கடவுள் சிம்மாதனத்தில் வீற்றிருக்கச் செய்வதைவிட, அந்த அரியாசனம், காலியாக இருக்கட்டுமே?"...

--சாக்ரடிஸால் தொடங்கப்பட்டு, வால்டேரால் வளர்க்கப்பட்டு, பெர்னாட்ஷா காலத்தில், அந்த சொல்லுக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டனர் அங்கு.

ஆனால் இங்கோ...

கடவுள்--அல்ல--கடவுள்கள்...

எண்ணற்ற இந்தக் கடவுள் கூட்டத்தை காப்பாற்ற--ஆராய அல்ல--ஆதிசங்கரர் தொடங்கி, மத்துவர் முடிய ஒவ்வொரு காலத்திலும், அறுபத்திமூவரும், பன்னிரு ஆழ்வார்களும் பிறந்து, அப்போதும் முடியாது, ஆதீனங்களும், அஹோபில மடங்களும், காஞ்சி காமகோடிகளும், காசி மடங்களும், தோன்றியும், இன்று வரை ஓர் முடிவுக்கு வராதது மட்டுமல்ல, அந்தக் கடவுள்களை, காப்பாற்ற, கவர்னர் ஸ்ரீஸ்ரீபிரகாசா காலத்தில், கோவை வீரா--சுப்ரமணியம், நாடக சட்டத்தின் கீழாவது அந்தப் புழுக்கள் தங்கி வாழ முடியாதா என்று, சட்டத்தை நடைமுறையில் கொண்டுவரும் அளவிற்கு வளர்ந்துள்ளது...

கடவுள்கள், கடவுள்கள், என்று கூறுகிறாயே, அதன் குணங்களைப் பார்த்தாயா...எத்தகைய குற்றம் புரியவும், இடம் தரும் உள்ளம். குகைவாழ் பண்பு -- நடைமுறையில் இகழ்ச்சிதரும் நடத்தை. நல்லவர்கள் வெறுக்கும் நிலை. இப்படியா...அந்தக் கடவுள்களின் குணம் அமையவேண்டும். குகை மனிதனின் சாயல் தெரிகிறதே...

அந்தக் கடவுளின், கையிலே ஏன், வில்லம்பு, கட்டாரி, கதை; யாரைத் தாக்க, இவைகள்?

தன்னைக் காப்பாற்றிக் கொள்வதாக இருந்தாலும் சரிதான், அல்லது தன் மக்களை பாதுகாக்க என்றாலும் சரிதான்...யாரிடம் இருந்து பாதுகாக்க, யாரிடமிருந்து, பாதுகாத்துக்கொள்ள...அப்படி என்றால் அந்த ஆண்டவனுக்கும், அப்பாற்பட்டு...அதற்கே பகையாக ஒரு சக்தியா...அது எது?

சோம பானத்தையும், மாட்டிறைச்சியையும், உணவாகக் கொண்ட, வேதகால கிருஷ்ணனும், இந்திரனும், உருத்திரனும் எங்கே?...இன்று "ஆண்டாள்" கூறும் அக்காரவடிசலை" உண்ணவரும் இவர்கள் யார்? இதிலிருந்து என்ன தெரிகிறது?

காட்டேரிமுனியனையும், ஒருமுறை எண்ணிப் பார்த்து...கைலைவாசனையும், மற்ற கடவுள்களையும் எண்ணிப் பாருங்கள். எத்தனை மாறுபாடு! உடை, உணவு, உருவம், அத்தனையும் வேறுபாடு தெரிகிறதே...ஏன்?

ஆலிலை மீது--அரியை குழந்தையாக்கிக் கண்ட அந்த மனிதனும்,

அலை தவழும் கடலில்--ஆதிசேஷன் மீது, குடும்பத்தோடு அரியை கண்ட மனிதனும் ஒருவர்... என்று கூறமுடியும்...

கங்கைக் கரையிலே இருந்து, கடவுளைக் கற்பனை செய்தவனா, 'கௌரவர்களின்' அத்தாணி மண்டபத்திலே, 'ஐவர்' முன்... அவனை கற்பனை செய்திருக்க முடியும். இவையெல்லாம் ... எதைக் கூறுகின்றன...?

ஆத்திகர் என்போர் அறிவுக்கும், அவர்களுக்கும், உறவுமுறை இல்லை என்போர்...அன்று கூறியவைகளைத்தானே...மீண்டும், மீண்டும் கூறிவருகிறார்கள்.

விளக்கம், சரி என்று ஒப்புக்கொள்ள முடியும். "விளக்கம் என்றால் விவேகத்துடன் இருக்க வேண்டாமா...அகலிகையின் வீட்டில் இருந்த இந்திரனுக்கு, அதனால் கெட்ட இந்திரனுக்கு, முன்பு ஏற்பட்ட 'சாபத்தை' கூறினால் போதுமா...

கலிலியோவின் தொலைநோக்கி காட்டியதையா...... கலிபோர்னியாவின் மலைஉச்சியிலிருக்கும், தொலை நோக்கியும் காட்டுகிறது.

விளக்கத்தின் -- திசை மாறிக் கொண்டிருக்கிறது. வினாக்குறி--விந்தைக்குறி இருந்த இடத்தில் இருந்து பிறந்தபடி உள்ளதே...

அப்படி இருக்கும்போது...ஆண்டவனுக்கு, இங்கு, அன்று கூறிய 'அதே--விளக்கங்களை' கூறுகிறார்களே...இன்னும் எத்தனை காலத்திற்கு கூறிக்கொண்டிருக்க முடியும். கூற விரும்புகிறார்கள்.

கடவுள்கள்--கடவுளாவது எப்போது...

பைபிளும்--பாபிலோனியக் குமாரனும், பரமண்டலத்து பிதாவின்--தூதுவர் என்ற நிலை மாறிவிட்டதே...

ஏசு--மாசற்ற உள்ளம் கொண்ட ஒரு மனிதன்--மனிதகுல வழிகாட்டி, அவனும் அவனைச் சார்ந்தோரும், அளித்த அறநூல்தான்--பைபிள்--என்று உணர்பவர் ஏராளமாகிவிட்டனரே...அங்கு.

இன்னும், எத்தனை காலத்திற்கு, இங்கு, தில்லை நடேசனும், திருப்பதி வெங்கடேசனும், இருக்கப் போகிறார்கள்.

கடவுள்கள்--மறையப் போவது எப்போது--'கடவுள்' இந்த நிலை பிறப்பது எப்போது?"

--இப்படி ஆர்வத்தால் அதற்கான உழைப்பால் பாடுபடும் உள்ளங்கள் ஏராளம்.

"கடவுள்"...அப்படி என்றால்?

கடக்கப்பட்ட, கடந்து நிற்கின்ற ஒரு பொருள்...

"பொருளா"...?

"அல்ல..." கடந்து நிற்கும் ஒரு சக்தி"...

"உலகிற்கும், அதற்கும் சம்பந்தமில்லையே?"

"ஏன் இல்லை ... உலகத்தைப் படைத்ததே...அதுதானே...?

"உலகத்தை அதுவா படைத்தது...ஏன்?"

"குதர்க்க வாதம்"

"மன்னிக்க வேண்டும், கடந்து நின்ற அந்த சக்தியைப்பற்றி ஒரு ஐயம்..."

" எந்த ஒரு சக்தியும், மற்றொரு சக்தியின், தூண்டுதலால் தான் நடைபெறுகிறது...எந்த ஒரு சக்திக்கும், எதிரிடையாக மற்றொரு சக்தி இயங்குகிறது"--

"நியூடன் கூறிய விதிகள்"...

"ஆமாம் -- அந்த விஞ்ஞானி கூறியது தான்--அதன்படி எண்ணிப் பார்த்தால், கடந்து நிற்கும் அந்த சக்தியைத் தூண்ட--அதாவது, கடந்து நிற்கும் சக்தி உலகைப் படைக்கும்போது, அந்தப் படைப்பு தொழிலைத் தூண்டிட...வேறு ஒரு சக்தி இருந்திருக்க வேண்டும்... பிறகு அத்தகைய (தூண்டிய-சக்திக்கு) சக்தியை தூண்டிட மற்றொன்று... இப்படியே... போகுமல்லவா...? அதோடு கடந்து நிற்கும் அந்த சக்திக்கு எதிரிடையாக ஒன்று இயங்கவேண்டுமே...எல்லாவற்றிற்கும் மேலாக...உலகைப் படைக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது...? இப்படி...எண்ணங்கள்... "கடிகாரம்" என்று ஒன்றிருந்தால்...அதை செய்தவன்..."உண்மை--ஒருவன் இருக்கவேண்டும்"... ஆனால் அவனை--அந்த கடிகாரம் செய்தவனை...பெற்ற தாயும் தந்தையும்--பின் அவர்களைப் பெற்ற தாயும் தந்தையும்...?"

"இயற்கை--அதுதான் அந்த சக்தி"...

"இயற்கையைப் பற்றி மனிதன் கவலைப்படுவது கிடையாது. கோயில் கட்டுவது கிடையாது. இயற்கையே மனிதனின் ஏவலாளாக மாறி வரும் இந்நாளில்"...

"எங்கும் நிறைந்துள்ள மின்சாரம் போன்றது...கடவுள்"...

"அணுவின் சுழற்சியை மனிதனுக்கு அடிமையாகிவிட்டது"...

"அன்பே கடவுள்; அறிவே கடவுள்"...

"பொருத்தமானது, போற்றப்பட வேண்டியது, ஆனால்"...

"அன்பே கடவுள் என்றால், அறிவே, அவன் என்றால், ஒன்று அன்பு என்று அழைப்போம், அல்லது, அறிவு என்று அழைப்போம்-'கடவுள்' என்ற தனிச் சொல் ஏன்"...

"அப்படி என்றால்"...

"அந்த சொல் அவசியமில்லை... அழித்துவிடலாம்" என்கிறேன்...

"நாத்திகன்"...

"தாங்கள்--என்னைப் புரிந்து கொள்ளவில்லை"...

"ஆமாம்--ஆமாம்--அது எப்படியாவது போகட்டும், இனி இது சம்பந்தமாக என்னுடன் பேசாதே..."

"காரணம்"...

"அதில் உனக்கு நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ...எனக்கு இருக்கிறது. அந்த நம்பிக்கை இருப்பதில் பெருமை கொள்கிறேன். அது எனக்கு இன்பம் அளிக்கிறது"...

"இன்பமா..."?

"ஆமாம். சொன்னால் தெரியாது. கடவுளை மனதினால் நினைத்துக்கொண்டிருப்பதில் எனக்குத் தனிச்சுவை இருக்கிறது"...

"சுவையா..."

"சுவைமாத்திரமல்ல...சுகமும்... நாவுக்கரசரும், தாயுமானவரும் கண்ட சுகம்..."

--இது போன்ற உரையாடல், நாட்டு நடப்பில் அதிகம் நடப்பது கிடையாது. ஆனால் பெரும்பாலோரின் முடிவு--இவ்விதம்தானிருக்கிறது.

பட்டாளிகளுக்கும், பகுத்தறிவற்றவர்களுக்கும், மூடநம்பிக்கையை சுமந்தவர்கட்கும், முதுகெலும்பு இல்லாதவர்களுக்கும், அறியாமை இருளில் அகப்பட்டு, விழி இழந்தவர்களுக்கும், இதெல்லாம் தெரியாது. கடவுள் என்றால் ஏதோ...அவன் நம்புகின்ற...அந்த உருவத்தோடு பதிந்துபோயிருக்கும்.

ஆனால் படித்தவர்கள், பகுத்துணர்ந்து பார்க்கக் கூடியவர்கள், பேராசிரியர்கள், இவர்கள் எண்ணுவதெல்லாம், வெளியே சொல்லாவிட்டாலும், அவர்கள் சிந்தையிலே உறைவது இந்த எண்ணம்தான்... கடவுள் உனக்கு உண்டோ...இல்லையோ...எனக்கு அப்படி நினைப்பதில், நம்புவதில், சுவையும், சுகமும் இருக்கிறது...என்று தான் கூறுவர்.

(9-ம் பக்கம் பார்க்க)

பெங்களூர் 'தென்றல்'
விற்பனையாளர்

டி. மாதவன்,
44, சிக்பஜார் தெரு,
பெங்களூர் கண்டோன்மெண்ட்
பெங்களூர்




## களம் 4

காட்சி: 4
இடம்: காட்டு மண்டபம்.
நேரம்: மாலை.

[ஒரு வாலிபனும், பருவமங்கையும் உல்லாச விளையாட்டில் ஈடுபட்டுள்ளனர். மண்டபத்தைச் சுற்றிக் கிடக்கும் மணல்வெளியில் ஓடி ஆடி மகிழ்கின்றனர். வாலிபன், அவளது முந்தானையைப் பிடிக்க--அவள் மனமொந்து கீழே விழுகிறாள். வாலிபன்--சுந்தரசோழன்--முதலே குறிப்பிட்ட மகன்--அவளை--மல்லிகையை--எடுத்து அணைத்தபடி...]

சுந் : என்ன குறும்பு இது!...உம்...உன்னை...ம்...அப்படியே...
மல் : அப்படியே...?
சுந் : கடித்துத் தின்றுவிடுவேன்!
மல் : ஆகா! பயங்கரக் காதல்!
சுந் : வாலிப வயதிலே காதலின் உருவமே பயங்கரந்தான்! ஆணும் பெண்ணும் புலிக்குணத்தோடுதான் காதல் புரிவார்கள்!
மல் : அனுபவம் பேசுகிறதோ!
சுந் : சேச்சே! உணர்ச்சி சொல்லும் கதை! உலக வாலிபர்களுக்கே இதுதானே பாடமாயிருந்திருக்க முடியும்!
மல் : நான் நம்பவில்லை. நீங்கள் வேறு யாரையோ காதலித்திருக்கிறீர்கள்!
சுந் : அப்படியேதான் வைத்துக்கொள்ளேன்!
மல் : (கோபத்தோடு) அப்படியானால் நான் எதற்கு! எனக்குத்தான் உங்கள் காதல் எதற்கு!
சுந் : அட பரிதாபசுந்தரி! கேள். புதிய வாலிபனின் காதலைக் காட்டிலும் பழகியவனின் காதலில் அனுபவ முத்திரை இருக்கும்! புதியவன் கற்பனைகளை வடித்து வைத்துக்கொண்டு, காதலுக்குப் பாதை சமைக்கிறான். அனுபவசாலி, பழைய பாதையை அழகாக்கிக்கொண்டு காதல் நடை போடுகிறான். புளித்த மதுவுக்குப் போதை அதிகம்! பழகப்பட்டவனுக்குத் தெரிந்தது அதிகம்.
மல் : அப்போது,...நான் ஒரு கிழவரைத் தேடியிருந்திருக்கலாம்! அனுபவம் நிறைய இருக்குமல்லவா!
சுந் : ஐயையோ! அவ்வளவு அனுபவம் ஆபத்து! அது, உணர்ச்சியும் உடல் உரமும் போனபிறகு, மிச்சமிருக்கும் வரட்டு அனுபவம். அதற்குப் பேசும் சக்தி உண்டு; செயல்பட முடியாது!
மல் : இருமனம் படைத்த இளைஞரைக் காட்டிலும், கிழவரின் பேசும் சக்திக்கு மரியாதை அதிகம்.
சுந் : அப்படியானால், மனம்போலச் செய்! கிழவரையே நாடு!
மல் : பொறுத்திருக்கிறேன்.
சுந் : ஏன்?
மல் : நீங்கள் கிழவராகவேண்டுமே!
சுந் : மல்லிகை!

[அவளை அருகில் இழுத்து அணைத்தபடி...]

இருவேறு உள்ளங்களின் இணைப்பும் பிணைப்பும்... பெற்ற தாயையும் பிறந்த பொன்னாட்டையும் கூட மறக்கடித்து விடுகிறது! உன் வண்ணமுகத்தழகில் எண்ணங்களைப் பதியவைத்து காதற்பாடத்தைக் கல்வெட்டாக்கிவிட என் மனம் துடிக்கிறது. வாழ்க்கையின் தனி இன்பத்திலே தாவிக் குதிக்க நான் ஆசைப்படுகிறேன். இந்த நாளும் இன்பவாழ்வும் இப்படியே தொடரவேண்டுமென்று நான் விரும்புகிறேன். கணநேரம் பிரிந்தாலும் என் மேனி கனலோடு உறவுகொண்டு விடுகிறது! வேண்டாம்! அரண்மனை வாழ்வும் அரசபோகமும் இந்தக் கதையின் ஒரு எழுத்தைக்கூடச் சொல்லமுடியாது! காய் கனி கிழங்கு காதலும் உண்டு--மரவுரி தரிப்பதாயினும் இந்தக் கானகத்திலேயே வாழ்வோம்.
மல் : அத்தான்! இந்த முடிவுக்கு நீங்களே வர நினைக்கும்போது, சாதாரணப் பெண்--நாளைய உணவுக்கு இன்று வழிதேடும் நிலையில், பிறந்தவளுமான உன்னுடைய வரவாமாட்டாள்! ஆனால், சோழன் செல்வனை மயக்கிவிட்டாள் சாகசக்காரி! அரசகுடும்பத்தின் ஆணிவேரைக் கொண்டுபோய் விட்டாள் என்றெல்லாம் ஊர் பழிக்கும் ஒரு பழிக்கே அஞ்சுகிறேன்!
சுந் : ஊர்ப்பழி--காற்றைப்போன்றது--அது யாரையும் தழுவும்--யார் விசிறியபோதும் பிறக்கும்--இடம் பொருள்புரியாது; --சொல்லப்போனால் இயற்கை விதிகளில் அதுவும் ஒன்று! மனிதரின் நாக்கு அதன் பிறப்பிடம். உலகத்தோரின் நாவையெல்லாம் அறுத்துப்போட்டாலொழிய பழிச்சொல்லுக்கு முடிவில்லை. அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்!
மல் : அப்படியானால்...
சுந் : இப்பொழுதே...இந்த விநாடிமுதலே நமது வாழ்வை இங்கு துவக்குவோம். இந்த மண்டபத்திலேயே நம் இன்ப உலகை அமைத்துக்கொள்வோம். மல்லிகை! வேட்டைக்கு வந்தால் இளைப்பாற வேண்டுமென்றுதான் விக்கிரமசோழர் இந்த மண்டபத்தைக் கட்டினார். இப்போது அது நமக்கு அரண்மனையாகப் பயன்படட்டும்!
மல் : அத்தான்!

[சுந்தரன் அவளை அப்படியே "புனற்கே புனல் கலந்தாற்போல்" அணைத்துக்கொண்டு, முத்தங்களை அச்சடிக்கிறான்--முகமுழுதும்.]

மல் : போதும்!
சுந் : ஏன்?
மல் : சத்தம் கேட்கிறது.
சுந் : கேட்கத்தான் வேண்டும்--சத்தமில்லாத முத்தம், தாளமில்லாத சங்கீதம்! தகதிமி தகதிமி என்னும் சதுஸ்ர நடையிலே துவங்கி, தகிட தகிட என்று திஸ்ர நடைக்கு உச்சி வளரும்போது முத்தத்தின் சத்தம் அதிகரிக்கும். வீணை முத்தம்--மிருதங்க முத்தம்--மேள முத்தம்--இது முத்தத்தின் சப்த வளர்ச்சி! இதுதான் காதற்பாட்டின் தாள இலக்கணப் பங்கீடு!
மல் : ஐயோ போதுமே! மேள முத்தம் கொடுக்க ஆரம்பித்தீர்களானால் ஆள் கூடிவிடும்.
சுந் : கூடட்டுமே! கூட்டமில்லாவிட்டால் கலைக்குச் சுவையில்லை! பாட்டுக்கலைக்கு மட்டுமல்ல--முத்தக்கலைக்கும் அதுதான் முறை!
மல் : (சிரித்து) அற்புதமான முறை!
சுந் : ஆம்! இதைப் பெற்றெடுத்த பெருமை என்னைச் சாரட்டும்! அகோ! பெண்ணே! வா! நகருக்குச் செல்வோம்! கூட்டத்தைக் கூட்டுவோம்...
மல் : ஐயோ! ஐயோ! வேறு ஏதாவது பேசுங்கள்!
சுந் : (சிரித்து) என்ன பேசுவது! பேசுகிற நாளெல்லாம் பிறவா நாளே! காதல், பேசாது!
மல் : பின்...?
சுந் : இப்படித் தொட்டு...இப்படி அணைத்து...விற்பிடி பிடித்து...

[காதல் பேசவில்லை...ஈரிரண்டு நான்கு பூக்கள், புல்லிதழிற் போய் ஒடுங்க, தமை மறந்து பூரிக்கின்றனர்...

அந்த ஆனந்த நிலையில் கண்மூடி, அவன் மார்பில் அவள் சாய்ந்து கிடக்கிறாள். மாலை சென்று...நிலவு வருகிறது, இரவு வந்ததற்கு அடையாளமாக! அவன் அவளது கூந்தலைக் கோதியவாறு கண்மூடியிருக்கிறான். சில்லென்று வீசும் காற்று, இருவரையும் தொடுத்த தொட்டு விளையாடுகிறது.

**கண்ணதாசன்**

மெதுவாக ஒரு பாடல் தவழ்ந்து வருகிறது. காதலர் இருவரும் திடுக்கிட்டு விழித்தல். குரல் சமீபத்திலிருப்பதை அவர்கள் உணருகிறார்கள்.]

குரல் : பாடல் :

பண்ணார் மொழிமென் பவளச்செவ் வாய்முலை
பைங்குரும்பை
விண்ணார் மதிமுகம் வேயிரு தோள்விரி
நீருலகில்
பெண்ணார் அமுதன்ன பெய்வளை மொய்குழற்
பேதைக்குநீ
கண்ணா குவைநினக் கங்குயிர் ஆவள்
கனங்குழையே!

[மண்டபத்தின் மறுபுறத்தினின்று வருகிறார், நெற்குன்ற வாணர்! வளையமுதும் மார்பழுதும் அவரை வரவேற்கின்றன!]

சுந் : அண்ணா!

மல் : ஐயா!

நெற் : தம்பீ! மகளே! வாழிய நீங்கள்!

சுந் : எங்கே அண்ணா வந்தீர்கள்?

[சிரித்து]

நெற் : நான் கேட்கவேண்டிய கேள்வி! நான் இங்குதான் இருக்கிறேன், சில தினங்களாக!

சுந் : நான்...சகோதரிக்கு நேர்ந்ததுபோல் மற்றுமொன்று நேராமல் தடுப்பதற்காக இங்கு வந்துள்ளேன்.

நெற் : எல்லாம் தெரியும் எனக்கு. "அமராவதியின் தம்பி... அவளது தோழியைக் காதலிக்கிறானாம்! அரசகுடும்பத்தின் அவமானக் கதையைப் பாருங்கள்!" என்று முன்பு அம்பிகாபதிபற்றிப் பேசும்போதே கூத்தன் சொன்னான்!

சுந் : கூத்தன்! அவனைக் கொலைசெய்யவே நான் தீர்மானித்து விட்டேன்!

[சிரித்து]

நெற் : பிணத்தைக் கொலைசெய்வது பேதமை! தம்பீ! அவனைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்! உங்கள் வாழ்வைச் செம்மையாக நடத்துங்கள்! குலோத்துங்கன் இப்போது மற்றொரு கொலைக்குத் தயாராயிருக்க மாட்டான்! அவன் இதயம் அவனைப் பிழிந்தெடுத்துக் கொண்டிருக்கும்! நீங்கள் நாடு சென்றே வாழ்க்கை நடத்தலாம்!

சுந் : நீங்கள்...?

நெற் : என் உலகத்தை இங்கேயே அமைத்துக்கொண்டு விட்டேன். தன்னந்தனியனுக்கு என்ன வேண்டும்! அதுவும் உயிருக்குயிரான ஒருவனை பலிகொடுத்த பிறகு உலகத்தில் என்னதான் எனக்கிருக்கிறது! அதோ என் குடிசை!

மல் : நாங்களும் உங்களுடனேயே தங்கிவிடுகிறோம்.

நெற் : தங்கலாம! ஏன் என்பதுதான் என் கேள்வி!

சுந் : நாடு திரும்பவே நான் விரும்பவில்லை!

மல் : கேடு சூழ்ந்தால், காரணம் நானாக அல்லவோ இருப்பேன்!

நெற் : அர்த்தமற்ற பயம்! ஆனாலும் அந்த பயத்திலிருந்து நீங்கள் விடுபட முடியாவிட்டால் என்னோடு தங்குவதில் எனக்கு மறுப்பில்லை.

சுந் & மல் : [ஏககாலத்தில்] நாங்கள் இங்குதான் இருக்கவேண்டும்!

நெற் : சரி! அம்பிகாபதியின் கதையை அமரகாவியமாக்க நான் முயன்று கொண்டிருக்கிறேன்! தம்பீ! உன் சகோதரியைப்பற்றி உனக்குத் தெரியும். அந்தரங்கத் தோழியாயிருந்த மல்லிகைக்கு அனைத்தும் தெரியும். அம்பிகாபதியின் பிறப்பும் வளர்ப்பும் பிறகு நடந்ததும் நானறிவேன்! முழுக்கதையையும் காவியமாக்க நாம் மூவருமே போதும்! இது எதிர்காலச் சந்ததிகளுக்குப் பாடமாயிருக்கட்டுமே!

சுந் : நல்லது அண்ணா!

நெற் : வாருங்கள் போவோம்!

[எல்லோரும் போதல்.]

—காட்சி முடிவு—

## களம் 5

காட்சி : 5

இடம் : இலக்கியக் கழகம்.

நேரம் : காலை.

[இலக்கியக் கழகம், அம்பிகாபதி கொல்லப்பட்டு இருபத்தொரு தினங்களுக்குப் பிறகு கூடுகிறது. "பெருங்கோதமன் வீதி"யில் வானளாவிய கட்டிடம் ஒன்று--அதுதான் கழகத்தின் கட்டிடம். உத்தமசோழன் காலத்தில் கட்டப்பெற்ற அந்தக் கட்டிடம் அடிக்கடி புதுப்பிக்கப்பெற்று வந்து--குலோத்துங்கன் காலத்தில் அழகுபெற்று விளங்குகிறது.

கழகத்தின் பேரவைக்கூட்டம்...கழக அமைச்சர் பவணந்தி முதலிலேயே வந்து உட்கார்ந்திருக்கிறார். அரும்பாக்கத்து அருணிலை விசாகர், ஆங்கூர்க்கிழத்தி ஆய்தேவி, விருத்தகாப்பியர் முதலியோர் ஒவ்வொருவராக வருகிறார்கள்! முருகூர் மோனமாகவிக் கிழவர் மேலாடையின்றி உள்ளே நுழைகிறார். அரும்பாக்கத்து அருணிலை விசாகர், அமைச்சருக்கு அருகில அமர்ந்திருந்தவர்--எழுந்து, மோனமாகவியின் அருகில் வந்து அமர்கிறார்.



அரும் : வணக்கம் ஐயா!

மோன : வாழிய நீடு!

அரும் : பேரவைக்கூட்ட அழைப்பில் சிறிது தாமதம்...

மோன : ஆமாம்...

அரும் : ஏனெனில்...

மோன : தெரியும்...

அரும் : அதுபற்றிய ஓர் கேள்வியை அவையில் எழுப்பலாம் எனக் கருதுகிறேன்.

மோன : வேண்டாம்.

அரும் : காரணம்...?

மோன : இருக்கிறது. கொஞ்சம் பொறுங்கள். படபடவென்று செயல்படல் முறையல்ல. பொறுத்தருள்க.

அரும் : இம்முறை நீடிக்கலாமா?

மோன : கூத்தனே அதைத் தீர்மானிக்கட்டும். அதுவரை பொறுப்பதில் ஆபத்தில்லை.

அரும் : ஒரு கொலை...இரண்டு கொலை...கொலையே இனிக்கூத்தன் தொழிலாகி விட்டால்...

மோன : புலமை போய்விடும். மனம் வெறிகொண்டுவிடும். என்றேனும் அவனுக்கும் அம்முடிவு ஏற்படும்!

அரும் : இத்தகு வழுவமைதி கூத்தனளவில் சரியல்ல என்பது என் கருத்து!

[ஆங்கூர்க்கிழத்தி ஆய்தேவியார், இப்போது மோனமாகவியின் மறுபுறத்து வந்து அமர்கிறார். சிறிது பழுதான கண்ணைத் திருப்பி, மோனமாகவி அவரைப் பார்த்து...]

மோன : அடடா! ஆய்தேவியார்! வாழிய நீடு!

ஆய் : உடல்நலம்...

மோன : சிறிது பழுது...காலங் கடக்கிறது...காடு அழைக்கிறது... எனைப்பற்றி என்ன...சோழமாகாவியம் எதுவரை...

ஆய் : முற்றும் தருணம்...ஐயாதான் ஆய்ந்து சீராக்கவேண்டும்.

மோன : (சிரித்து) ஆயின் கவியை ஆயின்...இறுதியில், ஆயப் புகுந்ததே தவறெனப் புலப்படும்!

[அரும்பாக்கத்து அருணிலை விசாகர் எழுந்து...]

அரும் : ஐயா! நான் அமைச்சர் அருகு செல்ல......

மோன : நன்று! நன்று!

[வாணியன்தாதனும், கூத்தனின் மாணாக்கன் அம்பிகாபதியும் நுழைதல். வாணியன்தாதன் சத்தமிட்டு...சிறிதும் பணிவின்றி]

வாணி : வணக்கம் ஐயா!

மோன : (நிமிர்ந்து பார்த்து) வணக்கம்! வாழிய நீடு! செவி பழுதல்ல...குறைஓசையும் நிறைபடக் கேட்கும் வலிவுண்டு!

வாணி : (சிரித்து) அதற்கல்ல! அன்பின் மிகுதி...ஓசை உரம் பெற்றுவிட்டது!

மோன : செவிகெடுக்கும் உரம்! அன்பு குறைதல் நலம்!

[விருத்தகாப்பியரும், அரும்பாக்கத்து அருணிலை விசாகரும் இது கேட்டுச் சிரித்தல்: ஆய்தேவி, கையொலி எழுப்புதல். வாணியன்தாதன் முகம் சுருங்குகிறது. 'மாணாக்கன் அம்பிகாபதியிடம் வாணியன்தாதன்.]

வாணி : முதுமை...அறிவிலும்!...மதித்திட அறியாச் சிறுமனம்!

மாணா : மெதுவாக! கலாம் வேண்டாம்

[பவணந்தி எழுந்து மோனமாகவியின் அருகில் வந்து.]

பவ : ஐய! நான் அமைச்சர் அருகு செல்ல...கூத்தர்-புகழேந்தியார்-கம்பர் - எவரையும் காணகிலோம்! அவை துவங்கலாமா...சிறிது பொறுக்கலாமா?

மோன : பொறுப்போம்...பொறுப்போம்.

[கூத்தன் கம்பீரமாக, பூம்புகார்ச் சால்வையை விசிறிப்போட்டபடி வருதல். வாணியன்தாதன் மட்டும் கையொலி எழுப்பி, "வாழிய கூத்தர்!" எனல். அவையில் வழுவமைதி.மாணாக்கன் அம்பிகாபதி அவர் பாதந்தொட்டு வணங்கல். கூத்தன் சுற்றுமுற்றும் பார்த்தபடி...இருப்பிடத்தில் அமர்தல்...அரும்பாக்கத்து அருணிலை விசாகர், தூரத்திலிருந்த ஆய்தேவியிடத்தில் பலமாக...]

அரும் : ஆய்தேவி! நாளை முழுநிலா! கூத்து உண்டா? பார்க்கப் போகலாமா?

ஆய் : கூத்தனுக்குப் பித்தமாம்! கூத்து நாளைக் கிடையாது!

[கூத்தன் முகம் சிவக்கிறது. கூத்தாடுவோனை இருபொருளில் 'கூத்தன்' என்று குறிப்பிட்டுப் பேசிய ஆய்தேவியை எரித்து விடுவான்போல் பார்க்கிறான், விருத்தகாப்பியர் பலமாக...]

விருத் : பித்தமா? வெறியா? வெறி என்றால் கூண்டில் அடைபட்டிருக்கவேண்டுமே?

ஆய் : பித்தம் வெறியாகலாம் என்பது மருத்துவர் கருத்து!

[எல்லோரும் சிரித்தல்.]

[தொடரும்]




பாங்கிகள் இல்லையேல் வாணிபம் எதுவும் செவ்வனே நடைபெற இயலாது. வட்டிக்குப் பணம் போடவும், வட்டிக்கும் அடகுக்கும் கடன் வாங்கி வாணிபத்தைத் துவளாமல் இயக்கவும்பாங்கிகள் மிகவும்இன்றியமையாத நிலையங்களாகும். இந்தியத்துணைக்கண்டத்தில்உள்ள பாங்கிகளில் வடவர்களுக்கு எந்த அளவு ஆதிக்கம் உள்ளது, திராவிடர்கள் எவ்வளவு வலிவற்று உள்ளார்கள் என்பதைப் பின்வரும் விவரங்கள் தெளிவாய்க் காட்டுகின்றன.

இந்த விவரங்கள் **Innerters Encyclopaedia**,1954 என்னும்புத்தகத்திலிருந்து திரட்டப்பட்டவை.

வடவரின் ஆதிக்கத்தில் உள்ள பாங்கிகளின் பட்டியல்.

1. அலகாபாத் பாங்க்(கல்கத்தா)
2. பாங்க் ஆப் பரோடா(பரோடா)
3. பாங்க் ஆப் பீஹார் (பாட்னு)
4. பாங்க் ஆப் போபப்பால் (போப்பால்)
5. பாங்க் ஆப் பிக்கானீர் (பிக்கானீர்)
6. பாங்க் ஆப் இண்டியா (பம்பாய்)
7. பாங்க் ஆப் இண்டோர் (இண்டோர்)
8. பாங்க் ஆப் ஜெய்ப்பூர் (ஜெய்ப்பூர்)
9. பாங்க் ஆப் மகாராஷ்டிரா (பூனு)
10. பாங்க் ஆப் பாட்டியாலா (பாட்டியாலா)
11. பாங்க் ஆப் பூனு (பூனு)
12. பாங்க் ஆப் ராஜஸ்த்தான் (உதய்ப்பூர்)
13. பெர்ரெய்லி கார்ப்பரேஷன் (பெர்ரெய்லி U. P.)
14. பாரத்நிதி (டெல்லி)
15. பாம்பே புரோவின்ஷியல் லேண்ட் மார்ட்கேஜ் பாங்க் (பம்பாய்)
16. பாம்பே ஸ்டேட் கோ-ஆப்ப ரேட்டிவ் பாங்க் (பம்பாய்)
17. செண்ட்ரல் பாங்க் ஆப் இண்டியா (பம்பாய்)
18. தேவ்கரன் நான்ஜீ பாங்கிங் கம்பெனி (பம்பாய்)
19. ஹபீப் பாங்க் (முன்பு பம்பாய் தற்போது கராச்சி)
20. ஹிண்டு பாங்க் (கல்கத்தா)
21. ஹிண்டுஸ்தான் கமர்ஷியல் பாங்க் (கான்ப்பூர்)
22. இம்பீரியல் பாங்க் ஆப் இண்டியா (கல்கத்தா அல்லது பம்பாய்)
23. ஜோத்பூர் கமர்ஷியல் பாங்க் (ஜோத்பூர்)
24. நராங் பாங்க் ஆப் இண்டியா (அமிர்தசரஸ்)
25. நியூ பாங்க் ஆப் இண்டியா (அமிர்தசரஸ்)
26. நியூசிட்டிசன் பாங்க் ஆப் இண்டியா (பம்பாய்)
27. ஓரியண்டல் பாங்க் (டெல்லி)
28. பஞ்சாப் நேஷனல் பாங்க் (டெல்லி)
29. பஞ்சாப், சிந்து பாங்க் (அமிர்தசரஸ்)
30. ரிசர்வ் பாங்க் ஆப் இண்டியா (பம்பாய்)
31. ஸ்டேட் பாங்க் ஆப் சௌராஷ்டிரா (பவநகர்)
32. யூனியன் பாங்க ஆப் இண்டியா (பம்பாய்)

**ஈ.வே.கி.சம்பத்**

33. யுனைட்டட் பாங்க் ஆப் இண்டியா (கல்கத்தா)
34. யுனைட்டட் இண்டஸ்ட்ரியல் பாங்க் (கல்கத்தா)
35. யுனைட்டட் வெஸ்ட்டர்ன் பாங்க் (சத்தாரா)
36. யுனைட்டட் கமர்ஷியல் பாங்க் (கல்கத்தா)

| | |
|---|---|
| முதலீடு | 35, 41, 86, 679 |
| சேமிப்பு நிதி | 27, 52, 14, 661 |
| 1953 ஞத்திய நிகர லாபம் | 16, 81, 31, 037 |

தென்னுட்டில தென்னுட்டவரின் ஆதிக்கத்தில் உள்ள பாங்கிகள்.

1. ஆந்திரா பாங்கு (மசூலிப்பட்டணம்)
2. பாங் ஆப் மதுரை (மதுரை)
3. பாங்ஆப் மைசூர்(பெங்களூர்)
4. பாரதா லட்சுமி பாங்கு (மசூலிப்பட்டினம்)
5. கனரா பாங்க் (மங்களூர்)
6. கனராபாங்கிங் கார்ப்பரேஷன் (உடுப்பி)
7. கனரா இண்டஸ்டிரியல் அண்டு பேங்கிங் சின்டிக்கேட்(உடுப்பி)
8. கத்தோலிக் பேங் ஆப் இந்தியா (திருவாங்கூர்)
9. கத்தோலிக் சிரியன் பாங்க் (திருச்சூர்)
10. சென்ட்ரல் பாங்கிங் கார்ப்ரேஷன் ஆப் திருவாங்கூர் (அலப்பி)
11. செட்டிநாடு மார்க்கண்டைல் பாங்க் (காரைக்குடி)
12. கொச்சின் கமர்சியல் பாங்க் (கொச்சின்)
13. கமர்சியல் டிஸ்கவுன்ட் பாங்க் (சென்னை)
14. ஹைதராபாத் ஸ்டேட் பாங்க் (ஹைதராபாத்)
15. இந்தியா பாங்க் (சென்னை)
16. இந்தியன் ஓவர்சீஸ் பாங்க் (சென்னை)
17. இந்தோ, கமர்சியல் பாங்க் (மாயூரம்)
18. இந்தோ மர்க்கன்டைல் பாங்க் (கொச்சின்)
19. கர்னுடகா பாங்க் (மங்களூர்)
20. கொட்டயம் பாங்க் (கொட்டயம்)
21. கும்பகோணம் பாங்க் (கும்பகோணம்)
22. பானே சென்ட்ரல் பாங்க் (திருவாங்கூர்)
23. பாண்டியன் பாங்க் (திருமங்கலம்)
24. ரிலையன்ஸ்பாங்க் ஆப்இந்தியா (சென்னை)
25. சதர்ன் இந்தியா பெக்ஸ்பாங்க் (உடுப்பி)
26. சௌத் இந்தியா பாங்க் (திருநெல்வேலி)
27. சௌத் இந்தியா பாங்க் (திருச்சூர்)
28. தாம்கஸ் பாங்க் (அலப்பி)
29. திருவாங்கூர் பாங்க் (திருவாந்திரம்)
30. திருவாங்கூர் கிரிடிட் பாங்க் (திருவாந்திரம்)
31. திருவாங்கூர் பார்வேடு பாங்க் (கொட்டயம்)
32. வைஸ்யா பாங்க் (பெங்களூர்)
33. மைசூர் ஸ்டேன்டர்டு பாங்க் (பெங்களூர்)
34. நெடுங்காடி பாங்க் (கோழிக்கோடு)
35. பாங்க் ஆப் கொச்சின் (எர்ணுகுளம்)
36. தஞ்சாவூர் பர்மெனன்ட்பாங்க் (தஞ்சாவூர்)

| | |
|---|---|
| முதலீடு | 6, 74, 61, 764 ஆறுகோடியே எழுபத்துநாலு லட்சத்து அறுபத்தி ஒராயிரத்து எழுநூற்று அறுபத்திநாலு |
| சேமிப்பு நிதி | 8, 25, 02, 802 எட்டுக்கோடியே இருபத்திஐந்து லட்சத்து இரண்டாயிரத்து எண்ணூற்றிரண்டு) |
| 1953 ஞத்திய | 99, 77, 245 |
| நிகரலாபம் | தொண்ணூற்றெரன்பது லட்சத்து எழுபத்தியேழாயிரத்து இருநூற்றிநாற்பத்தைந்து. |

-தொடர் கட்டுரை

# சுயமரியாதை அணில்!

**மன்னுர்குடி 'மக்கள் தியாகி' சொல்லுகிருர்!**

கோடு இல்லாத அணில்-புதுமையாக இருக்கிறது. மிக அழகாக இருக்கிறது. எங்குமே கண்டதில்லை. ஆகவே, இந்த அணிலை சமாதானப்பிரியர் ஜவகர்லால் நேருவுக்குத்தான் அனுப்பவேண்டும். ஆம்; ரஷ்யாவிலிருந்து அவர் திரும்பட்டும். அனுப்புவோம். நம் அன்பை இதன்மூலம் காட்டிக்கொள்வோம்.

**மன்னுர்குடி பகுத்தறிவுவாதி சொல்லுகிருர்!**

சபாஷ்! தெரிந்தோ தெரியாமலோ தேசியத் திருவாளர்கள் செய்யும் 'திருப்பணி'களும் நமக்கு சாதகமாகத்தான் அமைந்துவிடுகின்றன. முதுகிலே கோடு இல்லாத அணில் ஒன்று தென்பட்டதாம் அதை நேருவுக்கு அனுப்பப்போகிருர்களாம். நேரு சமாதானப்பிரியராம். அதற்காக இந்த கோடில்லாத அணிலாம். என்ன அன்பு! என்ன பக்தி! பக்தியிலே ஊறிப்போனவர்களைக் கேட்டால் கோடு இல்லாத அணிலை துரோக அணில் என்பார்கள். இராமன் இலங்கை நோக்கி சென்ற காலை 'சேதுக்கரை' எழுப்ப அணில்கள் மண் சேர்த்தனவாம். அதனுல் தான் இராமன் அன்பால் அணில்களின் முதுகுகளில் தடவினுராம். இன்றும் அணில்களின் முதுகுகளில் தென்படும் மூன்று வெள்ளைக்கோடுகளும் அப்போது உண்டானவைதாணும். எப்படி கதை? இந்தக் கதையை உண்மையாக வைத்துப் பார்த்தால் கோடு இலலாத நமது மன்னுர்குடி அணிலின் முதுகில் இராமனின் கைபடவில்லை என்றுதானே அர்த்தம். அப்படியானுல் இந்த அணில் பக்தர்களுக்கு 'எதிரி அணில்' நமக்கு அது 'சுயமரியாதை அணில்!' இராமனுக்குப் பணிந்து மண்சேர்த்து அணைகட்டவிட வில்லையல்லவா! 'எதிரி அணிலை' டில்லிக்கு அனுப்பப்போகிருர்களாம்! பக்தியின் காரணமாக அனுப்பப்பட்ட அணில்தான் இது என்று பண்டிதர் நினைப்பாரோ, அல்லது, அவருக்கும் இந்த 'அணில்களின் முதுகு'க் கதை தெரிந்து ஆகா, தென்னுட்டு காங்கிரஸ்காரர்கள்கூட நம்மை வெறுத்துவிட்டார்களே, 'உங்களுக்கு நாங்கள் பணியமாட்டோம் என்பதை அறிவிக்கத்தானே 'ராமனுக்குப் பணியாத அணிலை' அனுப்பியிருக்கிருர்கள் என்று நினைக்கிருரோ! மொத்தத்தில் இதுநமக்கொரு சாதகம் தானே!

**இது செய்தி**

மன்னுர்குடி மக்கள் தியாகி திருஞானம், என்பார் வீட்டில் முதுகிலே கோடு இல்லாத அணில் ஒன்று அகப்பட்டிருக்கிறதாம். அணிலை நேருவுக்கு அனுப்பப்போவதாக மக்கள் தியாகி


வெளிவந்துவிட்டது!

கண்ணதாசன் எழுதிய கழகக் காவியம்

பெரும்பயணம்

விலை ரூ. 1.

கிடைக்குமிடம்:

அருணேதயம்

40, பீட்டர்ஸ் ரோடு,

சென்னை-14.

## தோழர் கடவுள்...

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

சுவையும், சுகமும்....?

கடவுள்--இந்தச் சொல்லுக்கு சரியான்தோர் விளக்கத்தை தராததோடு மட்டுமல்ல, அவர்கள் உணர்ந்த சுவையும் சுகமும் கூட விளக்குவதில்லை.

இப்படி எல்லாம் கூறுவது, மடாதிபதிகள் மாத்திரமல்ல...'மறுமலர்ச்சி எழுத்தாளர்கள்' என்று தங்களை அறிமுகபடுத்திக் கொள்ளும் சிலரும் உண்டு. மீண்டும்... ...கேட்டால்--தாயுமானவர்--நாவுக்கரசர் என்பர்.

"அதோ...அந்த வீணை இருக்கிறதே...அதில் இருந்து, மாசு மறுவற்று எழுகின்ற இசைவெள்ளப் பெருக்கை கேள்."

"அதோ எழுகின்ற அந்த மூழுமதி...அந்த அழகியின் முகம் போன்ற--அமுத நிலாவைப் பார்... அதன் தண்ணொளியை உணர்..."

"தென்றலை ... சுவைத்தாயா ... உடலால்தான்...அந்த் முல்லைக் கொடியை தழுவி...அவள் மலர் உதடுகளில் முத்தமிட்டு அதனால் எழுகின்ற ஒலியும், தென்றலின் உதடுகளில் பதிந்த மணமும்... இதோ...என் உடலில்...இன்பம் மூட்டுகிறது...உன் உடலில்...?"

"அதோ ... பார் ... பெண்ணின் கன்னங்களுக்கு, எழில் காட்டி, உவமையாகும், மாங்கனிகளை... இதோ பலாக்கனி...பார்த்தாயா அங்கே...செவ்வாழையை...எங்கும் இன்பம்...என் தெரியுமா...இது இளவேனிற் காலம்..."

"அதோ...அந்த பக்கம், அங்கே பார், அந்த தாமரைக் குமரியை... அந்த வண்டு என்ன செய்கிறுள் பார்...மாணிக்க இலைகள்...அதன் நடுவே...முத்துக்கள்...வைரங்கள்.. அடடா...இதெல்லாம்...நீ ரசிக்கிருயா...உனக்கும் -- என்னைப்போல் இன்பமூட்டுகிறதா..."

"மனிதனே...இவைகள் தான் கடவுள்...ஐம்புலனுக்கும் இன்பம் தருகிறதே ... இவைகள் தான் ... கடவுள்"

"என்ன ?"

நான் கூறவில்லை நண்பர்களே... இதை நான் கூறவில்லை...நாவுக்கரசர் கூறியுள்ளார்..."

கடவுள் என்ற சொல்லுக்கு விளக்கம் கூறியுள்ளார்.

ஐம்புலனுக்கும் இன்பம் தரும் ஐந்து எழிற்காட்சிகளைக் கூறி...

அதுபோன்றது தான் கடவுள் என்று கூறியுள்ளார். கடவுளின் சுகம், கடவுளை எண்ணுவதால் உண்டாகும் சுவை, எது தெரியுமா... எது ஐம்புலனுக்கும் இன்பம் அளிக்கிறதோ...அப்போது உணரும், சுகமும், சுவையும்.

கடவுளின் காலடியில் இருக்கும் சுகம், ஐம்புலனுக்கும் இன்பம் தருமாம்...

"மாசில் வீணையும்,
மாலை மதியமும்,
வீசு தென்றலும்,
வீங்கிள வேனிலும்,
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை
இணையடி நிழலே..."

நாவுக்கரசரின் எண்ணத்தில் உதித்து, எழுத்தாணியால், உருகொண்டு, நம்பியாண்டார் நம்பி வந்து விடுதலை செய்யும்வரையில், இருட்டறையில் வாழ்ந்து, இன்று அச்சுப்பொறியிலே வெளிவந்திருக்கும் அத்தனை தேவார நூல்களிலும், இருக்கும் பாடல்தான் அது.

ஈசனின்மீது எழுகின்ற இனபம், ஐம்புலனுக்கும் இன்பம் தருகிறதாம்.

கடவுள்--அவருக்கு ஐம்புலனுக்கும் இன்பம் தருவது. கடவுள் அளிக்கும் அந்த ஒருசேர இன்பம், வேறு யாரும் அளிக்கமுடியாது... இல்லை என்றுல் நாவுக்கரசர், கடவுள் வாயிலாக அந்த இன்பத்தை கூறியிருப்பாரா...கடவுள்தான் --ஐம்புலனுக்கும் ஒருசேர இன்பத்தை அளிக்க முடியும்.

வீணையும், விண்ணிலவும், தென்றலும், வசந்தமும், 'மலர்'--வாவியும்--அளிக்கும், அளிக்ககூடிய அத்தனை இன்பத்தை ஐம்பொறிகளுக்கும் அளிப்பது ஆண்டவன் பாதங்கள்.

கடவுள் -- ஐம்பொறிகளுக்கும் இன்பம் அளிப்பார்.

ஐம்பொறிகளுக்கும், இன்பம் அளிப்பது--கடவுள்...

இந்த முடிவுக்கு யாரும் வரத்தான் செய்வார்கள். நாவுக்கரசர் பாடல் வகுக்கும் பாதை...நம்மை அங்குதான் -- அந்த முடிவிற்குத்தான் அழைத்துச் செல்லும்.

ஐம்புலனுக்கும் இன்பம் அளிப்பது 'அவர்'--'கடவுள்'--என்கிறுர் நாவுக்கரசர்.

ஆனுல்...மற்றெருவரோ...

"பார் தம்பீ...அந்த பாவையை...பைங்கொடி அவள், அழகி, அவள் இன்பத்தின் பெட்டகம், சுகத்தின் சொந்தக்காரி, எழிலோவியம்--யாரும் அவளுக்கு ஈடல்ல... இன்பம் என்ற சொல்லே...அவளிடம்தானிருக்கிறது...அவள் ஐம்புலனுக்கும் இன்பம் அளிப்பாள்-- அவள் ஒருத்திதானடா...அப்படி அளிக்கமுடியும்..."

இதைக் கூறுவதும் நான் அல்ல ...வேறு எந்த நாத்தீகனும் அல்ல. "அவர்" கூறுகிறுர்.

வாய்மைக்கு தன் நூலிலே இடமளித்து, நடுநிலைமைக்கும் அதிலே பங்கு காட்டி, அறத்திற்கு என்று பல 'அதிகாரத்தை' அமைத்துப் பாடிய அவர்தான் கூறுகிறுர்-- ஆமாம்--வள்ளுவர் கூறுகிறுர்...

**"கண்டு கேட்டு, உண்டு உயிர்த்து**
**உற்றறியும் ஐம்புலனும்,**
**ஒண்டொடிக் கண்ணே யுள"...**

என்ன பொருள்--இந்த இரண்டு வரிகளுக்கு. 'ஐம்புலனும்'! அழுத்தமாகக் கூறுகிறுர். - ஐம்புலனுக்கும் இன்பம் அளிப்பது அவளே... என்று...

திருநாவுக்கரசரோ..."எது ஐம்புலனுக்கும் இன்பம் அளிக்கிறதோ...அது அண்டவன்" என்கிறுர்.

வள்ளுவரோ..."ஐம்புலனுக்கும் இன்பம் அளிப்பது வேறு யாருமல்ல...'பெண்' தான் என்கிறுர்.

ஆத்திகர் தொழும் அப்பரோ... அப்படிக் கூறுகிறுர்--அறிஞர் போற்றும் வள்ளுவயோ...இப்படி செப்புகிறுர்...

"எது ஐம்புலனுக்கும் இன்பம் அளிக்கிறதோ...அது ஆண்டவன்"..

பெண்தான் ஐம்புலனுக்கு இன்பம் அளிப்பாள்...

"எது ?"

"கடவுள்--பெண்"...

"ஆண்டவன்--அவள்"

அதுமாத்திரமல்ல என்கிறுர் தாயுமானவர்...

"ஆண் ஒருவன்--பெண் ஒருத்திக்கு தரும் சுகம்" அதுதான் ஆண்டவன் தரும் சுகம். என்கிறுர் தாயுமானவர்...

இத்தனை சுருக்கமாக கூறிவிடவில்லை--உவமையோடு--ஆண்டவன் 'சுகத்தை'ப்பற்றி விளக்குகிறுர்...

ஒரு பெண், ஆடவன் ஒருவன் அளிக்கும் சுகத்தை அறியுமுன், அனுபவிக்குமுன், வெறுத்து பேசுவதும், இகழ்வதுமாக இருப்பாள். என்றேனும், அதை பெற்றுல்-- பின் ஆடவனைப் பிரிய விடமாட்டாள். இன்பத்திற்காகத் துடிப்பாள்...ஏங்குவாள், அது போலத்தான் கடவுள் இன்பமும்."

...சரி திரும்பிப் பாருங்கள் இப்போது..."

வள்ளுவரோ ... ஐம்பொறிக்கும் இன்பம் அளிப்பவள் பெண்தான் என்கிறுர்.

ஆண்டவனுக்கு விளக்கம் கூற வந்த 'இரு அடியார்களும், தங்களை அறியாமலேயே 'அவர்'--வள்ளுவர்'--பாதைக்கே சென்றுவிடுகிறுர்கள்.

...அது எப்படியோ போகட்டும்... மூன்று பாடல்களையும்...ஒருசேர படிக்க நேரும் ஒருவர், காணும் காட்சி எதுவாக இருக்கமுடியும்...?

'கடவுள்' அதற்கு, இந்த மூன்று பாடல்களும் தரும் விளக்கம் இது...?

தெரியாத, ஒன்றை விளக்க விரும்பினுல், அல்ல அல்ல அது கூட அல்ல, "பொருள் அற்ற ஒரு சொல்லுக்கு" பொருள் கூற விரும்பினுல்...பயன் கனியாகவா...இருக்கும்...?

எத்தனையோ...நூற்றுக் கணக்கான ஆண்டுகள் ஓடிமறைந்தன... எத்தனையோ...அடியார்களும், அறிஞர்களும், கவிஞர்களும், பொருள் தேடி பயனற்று போன அந்த சொல்--பொருளற்ற அந்த சொல், மனித இனத்தின் குழந்தைப் பருவத்தில் உளறிய அந்த ஒலிக்கு ஏன், அடிமைப்பட்டு கிடக்க வேண்டும்? ஆயிரக் கணக்கான நிழல் ஒவியங்களை தீட்டி, நம்மை ஏன் நிமிர்ந்து நிற்கமுடியாதவர்களாக்கிகொள்ள வேண்டும்?

தொல்காப்பிய காலத்தில் இருந்த சில சொற்கள் இளங்கோ அடிகள் காலத்தில் இல்லை... புறநானூற்று பாட்டிலே பழகிய சொல்லாக இருந்தும், இன்று நிகண்டுகளைப் புரட்டி பொருள் தேடும் நிலையில் உள்ளனவே...ஏன்?...

வழக்கிழந்துபோன எந்த சொல்லும், பொருள் அற்ற 'ஒலி--துண்டுகள்' அல்ல. ஆனுலும் அவரை அருகிப்பாய்விட்டன...

ஆனுல் பொருள் அற்ற ஒரு சொல்மட்டில் ஏன் இன்றும் இருந்து கொண்டிருக்க வேண்டும்? அகராதியில் இருந்தே...அந்தச் சொல்லை அழித்துவிட்டால்...

"நாத்திகன்"

ஒலி எனக்குக் கேட்கிறது... உலகம் இப்படித்தான் அழைக்கும் --ஆரம்பத்தில்...

ஆனுல், வள்ளுவரையும், நாவுக்கரசரையும், தாயுமானவரையும் ஒருங்கே காணட்டும் உலகம். கடவுளுக்கு அவர்கள் தரும் அந்த விளக்கம்...யாரையும் இப்படி எண்ணத்தானே வைக்கும்.

கடவுள்--அதற்கு ஒரு விளக்கம்.

தேவைதான் -- சேவை செய்ய எண்ணுபவர்கள், சித்தாந்தம் பேசுவோர், சிவநெறி போற்றுவோர், செய்வார்களா ... தருவார்களா ... ஒரு விளக்கம்.

—"இசையமுது"

### கோவையில் பொதுச் செயலாளருக்குப் பாராட்டு

**3-7-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு கோவை சிதம்பரம் பூங்காவில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் கோவை மாவட்டச் செயலாளர் ஈ.வெ.கி. சம்பத் அவர்களும் பேசுவார்கள். அதுசமயம் மாவட்டக் கழக சார்பில் மாநில மாநாட்டு நிதியளிக்கப்படும்.**

**காலை 7 மணிக்கு ரயிலடியில் வரவேற்பு.**

**மாலை 4 மணிக்கு தெப்பக்குளம் வீதியிலுள்ள நகர கழக அலுவலகத்திலிருந்து ஊர்வலம். பிற்பகல் 1 மணிக்கு விருந்து (கழக சார்பில்)**

**கோவை மாவட்ட நகர தி.மு.க.**

★

**விருந்தில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் கோவை நகரக் கிளையின் உதவி செயலாளரிடம் 2உக்குள் 1 ரூபாய் செலுத்தி கலந்து கொள்ளலாம்.**




# இலக்கியத்தில் காதல்

தங்கக்குடமெடுத்து தண்ணீர் கொண்டுவரக் கிளம்பினர் இரு பெண்கள். அப்படியும்இப்படியுமாக ஆடியசைந்து, ஊரின் தெருக் கோடியை வந்தடைந்தனர். அதன் பின், பாதை இரு கூருக, ஆற்றை நோக்கியும் அதன் எதிரே ஓங்கி வளர்ந்து நிற்கும் அடர்ந்த ஆலங் காட்டை நோக்கியும் பிரிகிறது.

இதுவரை, இருவரையும் கவ்விக் கிடந்த மௌனம் கலைகிறது; தற் காலிகமாக நாணமும் அவர்களை விட்டு நழுவத்தொடங்கியது. தனிமை சூழ்ந்தபின் நாணத் திற்கோ நளினத்திற்கோ அங் கென்ன வேலை?

அந்தப் பைங்கிளிகள் பேசத் தொடங்கின; கிளிகள் பேசுவதில்லை தான். மாருக, இந்தப் பைங்கிளி கள் பேசின. ஒருத்தி தலைவி, மற்றொருத்தி அவளது நலன் நாடும் தோழி! எனவே, கேட் போம்; பின்தொடர்வோம்.

**தோழி:** "ஏண்டி தேன்மொழி! உன் கண்களேன்இப்படி சிவப்பேறி யிருக்கின்றன? இரவு முழுவதும் கண்விழித்துக் கிடந்தாயா? அல்லது கனாக் கண்டாயா?

**தலைவி:** என்னடி, அறியாத வளைப்போல கேட்கிருய்? நேற்று முழுதும் ஆற்றுவெள்ளத்தில் நீந்திக் குதித்ததை மறந்தனையா? அதனுல் வந்தவினைதான், இது!

இது கேட்டு, தோழி நகைத்தாள்! ஒருவர் உடலில் ஒருவர் ஒதுங்கி, இருவரெனும் தோற்றமின்றி, புனலில் புனற்கலந்தாற்போல, தலைவியும் தலைவனும் ஆலங்காட்டில் நடத்திவரும் திருவிளையாடலை அவளென்ன அறியாதவளா, ஆற்று நீரைக்காட்டி ஏமாற்ற! இருந் தாலும், தோழி கேட்டாள். "ஏண்டி! மீன்குஞ்சிற்கு நீச்சுக் கற்றுத் தருகிருயா என்ன? கண்கள் சிவந்திருப்பதற்கு காரணம் சொன்னுய் நம்புகிறேன் உனக்காக. ஆனுல், உன் உதடுகள் வெளிரிப் போயிருக்கின்றனவே, அதற்கு என்ன காரணம் காட்டப்போ கிருய்?"

தலைவி எப்படி பதில் கூறுவாள்; அதெல்லாம், சொல்லித் தெரியும் கலையாவென்ன! வாயின் சிவப்பை விழிவாங்க, மலர்க்கண் வெளுப்பை வாய் வாங்கும்படி, கவ்வி இன்பம் தந்த, அந்த குறும்புக்கார தலைவனைக் கேட்டிருந்தால் ஒருவேளை பதில் கிடைத்திருக்கலாமோ என்னவோ!

இதற்குள், அடர்காடு அருகே நெருங்கிற்று. தலைவியைப்பொருத்த மட்டில், அது காடல்ல, கானமிசைக் கும் கலாமண்டபம். இந்த மீட்டாத யாழை, சுருதிகூட்டி இசைக்கும் இசைவாணன், காத்துக்கிடக்கும் இடமல்லவா? என்றும்போல, தோழி பின்தங்கவும் தலைவி தனி வழி நடக்கவுமான எல்லை வந்தது. எதிர்பாரா வண்ணம், முன்பின் அறியாத ஆடவனொருவன் எதிர்ப் பட்டான். வந்தவனோ, தோற்றத்தில வேற்றான். உடலெலாம் திருநீறு-நெற்றியிலே, குழைத்த சந்தனப் பொட்டு 'அருள்' குறிக்கும் துளசி மாலை கழுத்திலே-'இருள்' விரட்ட கையிலே வேப்பிலைக் கொத் தொன்று - மற்றொரு கையிலே உடுக்கை-அவனைப் பின்தொடர்ந்து மிரள மிரள விழிக்கும் ஆடொன்று இத்யாதி சகிதமாக காட்சி தந் தான்.

"அம்மணிகளே! விழிப்பூருக்கு போகும்வழி இதுதானே?" என்று வினவினுன். "ஆமாம்! அதோ தெரிகிறதே, பழமுதிர்ச்சோலை; அதற்கு இடது நோக்கிச்சென்ருல், விழிப்பூர்" என்ருள் தோழி.

"கணக்காயர் மருதவாணரின் வீடு, ஊர் புகுமுன்னு, அன்றி நடுவிலா, கடையிலா?"-வந்த வழிப் போக்கன விடுவதாயில்லை.

கணக்காயரது பெயரைக் கேட் டதும் தலைவியும் தோழியும் நடுங் கிப்போயினர். வந்தவன் வழிகுறித் தப் பேசுகிருனு, அன்றி வாழ்வு குறித்து கேட்கவந்தவனு, உறவின் முறையோ, அன்றி தலைவன் விடுத்த தூதுவனோ, என்று அஞ்சு கின்றனர். ஏனெனில் அவன் விசாரித்த 'கனவான்' வேறு யாருமல்ல; தலைவியை பெற்றெடுத் தகப்பன்!

தலைவி தயங்கினுலும், தோழி அவனை விட்டாளில்லை!

"அவரிடம் உங்களுக்குகென்ன வேலை? வியாபாரம் குறித்தா......" என்று எதிர்க்கேள்வி போட்டாள் தோழி.

"என்னிடம் அவருக்கென்ன வேலையெனக் கேளுங்கள், அம் மணி!" என்று சிறு திருத்தம் கொடுத்தான் வழிப்போக்கன.

"புரியவில்லையே!" என்ருள் தோழி!

"அப்படியா! சொல்கிறேன், கேளுங்கள். அந்தக்கணக்காயருக்கு மணமுடிக்கத் தக்க வயதில் பெண் ணொருத்தி உண்டாம். பெயரை கூட தேன்மொழி என்று கூறினுள் அவர் வீட்டு செவிலித்தாய். கடந்த சில திங்களாக, அவளைப் பேய்பிடித் தாட்டுவதாகவும் கூறினுள்" என்று தொடர்ந்தான வழிப்போக்கன்.

"என்ன; தேன்மொழிக்கு பேயா? அதெப்படி உங்களுக்குத் தெரிந்தது?"

"இதென்னம்மா, கேள்வி! மண மாகாத வாலிபப் பெண்களுக்கு, கண்கள் சிவப்பதும் வாய் வெளிப் பதும் இதற்கான அறிகுறிகள் என்று ஒரு போடுபோட்டான் வழிப் போககன்.

இப்பொழுதுதான் தோழிக்கு மூச்சு வந்தது. தலைவிக்கோ சிரிப்பு வந்தது.

"அது போகட்டும்! அதற்கும் உங்கள் விஜயத்திற்கும் என்ன சம்பந்தமோ?" என்று கிண்டினுள், தோழி!

"இதென்ன கேள்வி! பேய் பிடித்த இடத்தில் பூசாரிக்கு வேலையில்லாமல் வேறு எவருக்கு வேலையிருக்கமுடியும்? ஆரியனூர் பூசாரி குனக்குடியான் உடுக்கையுடன் வருகிருனென்ருல் ஓண்டவந்த பேய்கள் ஒரு காததூரம் ஓடாதாவென்ன? என்று விருப்புடன் கேட்டான். அந்தப் பூசாரி!

"ஓகோ! நீங்கள்தான் அந்தப் பூசாரியோ!" என்று கூறி, தலைவியும் தோழியும் விலா நோகச் சிரித்தனர். ஒன்றும் விளங்காத பூசாரி, ஊருக்குள் நடையைக் கட்டினுன். நிலையறியாத செவிலித்தாய்-நோய் புரியாத தகப்பனுர் - இவர்களது பேக்கைக் கேட்டுக்கொண்டு, அலைமோதி யடித்துக்கொண்டு ஓடி வந்திருக்கும் பூசாரி! இவர்களை நினைத்தாலே, தலைவிக்கு சிரிப்பு வந்தது. அத்துடன் அவர்களது அறியாமை கண்டு இரக்கமும் பிறந்தது!

ஆனுல், புலவர் மாறன் பொறையனுருக்கோ மடமையைச் சாட தக்க வாய்ப்புக் கிடைத்தது!

**வெறிகமழ் வெற்பன்என்**
**மெய்ந்நீர்மை கொண்டது**
**அறியாள் அன்னே-அணங்கு**
**அணங்கிற்று என்று**
**மறிஈர்ந்து உதிரம்தூய்-**
**வேலன் தூஉய்**
**வெறியோடு அலம்வரும் ஆய்**
**(ஐந்திணையம்பது)**

கண்மூடிவழக்கமென்கூட சொல்லவில்லை; 'வெறி' என்றே கூறி விட்டான் அந்தப் புலவன்.

—சந்தனத்தேவன்

## தேர்வு

நமது இயக்க எழுத்தாளர் தோழர் வி. சிவப்பிரகாசம் B.A. (சிவம்) அவர்கள் சென்னை சட் டக் கல்லூரி எப். எல். தேர்வில் இரண்டாவது வகுப்பில் தேர்ச்சி பெற்ருர்.

## மோகனாஸ்திரம்!...

(2 ம் பக்கம் தொடர்ச்சி)

"போதும்; உன் கற்பனையை நிறுத்து. கண்முன்னே ஒருநாய்க் குட்டியேனும் காணப்படா முன் னரே நூறென்றும்ஆயிரமென்றும் கணக்குப் போடுகிருயே! மேலும் வெட்டுக்கிளிகளைப்போல் நாய்கள் ஜனிப்பிப்பதில்லை. எனவே தெரு நாய்களின் விடாமுயற்சியை முறி யடிக்க, உடனே உயர்ஜாதி ஆண் நாயை எவ்வாறேனும் நீ சம்பா தித்துக் கொண்டுவா. தாமத மின்றி கஸ்தூரியின் விருப்பமும் பூர்த்தியாகட்டும்."

குமார் தலையசைத்தான். "எவ ரிடம் சென்று என்னவென்று கேட்பது? சங்கிலியால் பிணைக்கப் பட்டு தெருவிலே காற்றுவாங்க நடந்துசெல்லும் ஜாதிநாய்களைக் காண்கிறேன. நாயின் எஜமான ரிடத்தில் எனக்கு இன்ன காரியத் திற்காக ஆண்நாய் வேண்டும் என்று கூறிடமுடியாது. கூச்சம் தடுத்த வண்ணமிருக்கிறது."

"தேவையற்ற சங்கோசம்."

இரண்டு மாதங்களுக்கப்புறம் ஒருநாள் இளங்கோ குமார் வீட்டிற் குச் சென்ருன். கஸ்தூரியின் இடது முன்னங்காலைத் தாங்கிப்பிடித்த வண்ணம் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தான். குமார் "ஒரு சிறிய காயம் எப்படி ஏற்பட்ட தென்றே தெரியவில்லை. மிருக வைத்தியரிடம் எடுத்துச்செல்ல இருக்கிறேன்," என்று விளக்கினுன்.

"உன் ஜூலியட்டின் ரோமியோக் கள் வெளியிலே ஒருவரையும்காண வில்லையே."

"கஸ்தூரி தன்மானத்தைத் திரும்பப் பெற்றுவிட்டது. தெரு நாய்கள்மீது நான் வெறுப்புக் கொண்டுள்ளேனென்பதை அதுவும் உணர்ந்துவிட்டது. கஸ்தூரி யின் பாராமுகத்தைக் கண்டு இவ் வீட்டைச்சுற்றி வட்டமிட்டுக்கொண் டிருந்த நாய்கள் வேறிடம் நோக்கிச் சென்றுவிட்டன, என விகாரமெல் லாம் நீங்கிவிட்டது. கஸ்தூரிக்கு தகுந்த ஆண்துணை தேடும் முயற்சியில் இன்றும் ஈடுபட்டுள்ளேன்."

"நீ வீணில் காலதாமதம் செய்து கொண்டிருக்கிருய் என்பதே என் கருத்து."

பின் குடித்தனத்திற்குரிய விலங்குகளின் நோய்களைத் தீர்க்க வல்ல வைத்தியரிடம் நண்பர்களும் நாயும் சென்றனர். காயத்திற்குக் கட்டுக்கட்டிய வைத்தியர் அதைத் தடவிக்கொடுத்த வண்ணம், "நல்ல ஜாதிநாய். இதற்குப் பிறக்கப் போகும் குட்டிகளிலொன்றை எனக்குக் கொடுத்தால் நன்றியுடையவனுயிருப்பேன்" என்று கூறினுர். "நிச்சயமாகத் தருகிறேன்," என்று உறுதிமொழி கூறிய குமார், தன் சிறு பாக்கட் நோட்டை எடுத்து அவர் பெயரைக் குறித்துக்கொண்டான்.

வைத்தியர் குரலிலே இனந்தெரியாத உண்மை யொன்று ஒளிந்திருப்பதாக ஊகித்த இளங்கோ "குட்டிகளைப் பெறும் நிலையிலா இது உளது" என்று சந்தேகத் துடன் கேட்டான். "ஆமாம். இதிலென்ன சந்தேகம். கர்ப்பம் தரித்திருப்பதால்தான் நான் ஒரு குட்டி தரமுடியுமா என்று கேட்டேன்" என்று பதிலளித்தார் வைத்தியர்.

அப்போதுதான் குமாருக்கு உண்மை விளங்கிற்று. 'நன்றி கெட்ட நாயே' என்று மனத்திற்குள் உறுமிக்கொண்டே "உண்மையாக வா, டாக்டர், நிச்சயமாய்த் தான் கூறுகிறீர்களா?" என்று பரிதாபமாய்க் கேட்டான்.

"ஏன் அதிலென்ன தப்பு?"

"அதற்கில்லை. தாங்கள் சரியாகப் பரிசோதித்துவிட்டுத்தான் கூறுகிறீர்களா?"

"முழு பரிசோதனை தேவையில்லை. கைப்புண்ணுக்குக் கண்ணாடி தேவையில்லையே. நான் இந்த விஷயங்களில் பார்த்தவுடனே கூறுபவைகளில் தொண்ணூற்றொன்பதுசதவிகிதம் 'கரெக்ட்'டாயிருக்கும்."

மேலும் வைத்தியருடன் பேசிக் கொண்டிராமல் நாயைச் சுமந்தவாறு குமார் வீடுநோக்கி நடை கட்டினுன்; இளங்கோவும் அவனைப் பின் தொடர்ந்தான்.

◉

## திருமணம்

'தென்றல்' அலுவலகத் தோழர் ஏ. மணி அவர்களுக்கும் திருமதி நா. கிருஷ்ண வேணிக்கும் 7-7-55 வியாழன் காலை 9 மணிக்குமேல் 10-30 மணியளவில் மணமகன் இல்லத்தில் (9, சந்தா சாகிப் தெரு, மீர்சாகிப்பேட்டை) திருமணம் நடைபெறும்.

# வெண்பாப் போட்டி

## 10. தென்றலே யேன்வந்தாய் செப்பு

வெண்பாப்போட்டி 10-ன் பரிசுபெற்ற வெண்பாவையும், ஏனைய தகுதியுடைய வெண்பாக்கள் சிலவற்றையும் இந்த இதழில் வெளியிட்டுள்ளோம். மீதமுள்ளவை அடுத்த இதழில் வெளியாகும்.

பொன்னும் புகழ்முத்தும் பூந்துகிலும் நாவாயும்
மன்னு திகழ்வீரம் நாதலென--தென்னகத்தில்
அன்றிழந்த தேதும் வரவில்லை நீமட்டுந்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—இரா. அன்புரையன், அம்மையப்பன்.

★

மானபொருள் தேடியபின் வந்திடுவேன் என்றுரைத்துப்
போனவரைக் காணேன் ; புழுங்குகிறேன்--யானவரை
முன்றிலில் நின்று முகம்நோக்கல் கண்டும்நீ
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

★

வெண்திங்கள் செய்யுங்கூர் வேதனையைத் தாங்காமல்
தண்ணினியர் வன்பிரிவால் தாக்குற்ற--ஒண்மொழிமுன்
குன்றுவெங் கோபக் கொலைகளத்து ஏதிலர்போல்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—வி. ப. கோவிந்தசாமி, சென்னை 12.

★

சோலையிலே நித்தம்நீ சூழ எதிர்பார்ப்போம் !
காலன் கணவரைத் தான்கடத்த--மாலையில்நீ
கொன்றிடுகின் றூயே ! குலாவ அவரிலையே !
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—பவானி. வெ., மதுரை.

★

வஞ்சி யுனைப்பிரியேன் வாய்மையீ தென்றவர், பின்
நெஞ்சம் பொருள்வலிப்ப நீங்கினரால்--பஞ்சணையில்
இன்துயில் கொள்ளா திரங்குகின்றேன் இன்னிலையில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—க. வீ வரதன், சென்னை 23.

★

காமணக்கும் பூமணத்தால் நீமணக்கும் காரணத்தால்
நாமணக்கும் நாயகனின் நன்முத்தத்--தேமதுவை
உண்டு முயங்குங்கால் ஊடுருவி ஓடிடவோ
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—மு. சீ. வெங்கடாசலம் (எம். ஏ. வகுப்பு), திருச்சி:

★

பூவைத் தழுவுதற்கோ ? பொன்னொளி மாய்ப்பதற்கோ ?
பாவை அணைப்பதற்கோ ? பைந்தமிழைப்--பூவெங்கும்
சென்று பரப்பிச் சிரிப்பதற்கோ ? தண்சிந்தித்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—அ. வேதாசலம், அறந்தாங்கி.

★

குன்றடுத்த தோளன் குறித்த இடம்வந்தான்
அன்றிலடி நாங்கள், அறியாயோ ?--ஒன்றியவெம்
பொன்னுடலம் ஊடுருவப் போந்து விழிக்கின்றாய்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—கு. இரமாதேவி, சென்னை 1.

★

காலைமுத லாலையிலே காதலியை எண்ணியே
மாலை வரைஉழைத்து மனையேக--மாலையிட்டாள்
சென்றாளாந் நோயினுக்கு, தேகம் கொதிக்கிறதே
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—எஸ். செல்லப்பன், மதுரை.

★

என்னுயிர்க் காதலியாம் ஏந்திழையாள் மாய்ந்திட்டாள்
இன்பம் அனைத்தும் இழந்திட்டேன்--துன்பங்கள்
ஒன்றலவே நானிங் குருக்குலைந்து வாடுகையில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—ஆர். எம். வேதராசன், பொன்மலை.

வெண்ணிலவும் இங்கில்லை வேல்விழியாள் தானில்லை
மண்ணுலகில் எங்கும் மகிழ்வில்லை--கண்ணிழந்து
கன்றியென் உள்ளம் கசிந்துருகும் வேளையில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—பொற்குன்றனார், பொன்மலை.

★

பாசத்தை யூட்டவோ ? பண்பைப் பரப்பவோ ?
நேசத்தை காட்டவோ ? நீணிலத்தில்--மோசஞ்செய்
நன்றியிலா மாந்தர்க்கு நல்லுரைகள் தந்திடவோ ?
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—சண்முகனார், பொன்மலை.

★

கொஞ்சுமொழி யாளவளும் மஞ்சளிழந் தாளதனால்
கொஞ்சிமகிழ் நல்வாழ்வு கூடாதென்--றஞ்சாது
நன்றாகத் தான்வாழ நல்லிடமே தாரார்முன்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—ச. மருதமுத்து, உடுமலை:

★

ஏழைத் துயர்நீக்கி வாழ்த்திடவோ எங்குமுள்ள
கோழைத் தனத்தைக் கொளுத்திடவோ--வேலையில்லாத்
திண்டாட்டம் வீழ்த்திடவோ வீணரைத் தாழ்த்திடவோ
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—பி. பி. எஸ். தாஸ், பாலையம்பட்டி.

★

கட்டத்தால் கிட்டில் கடிமணம் கான்கடந்தும் ;
கொட்டுதின்பங் கேட்டுக் குறுகரம்போ ;--தொட்டாலே
பொன்றவைக்கும் மற்றவழி ; என்செய்வேன் ! இக்கிலையில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—ச. த. வேலன், பந்தல்குடி.

★

பூவுலகிற் பொற்கொடியார் பொற்பெல்லாஞ் சேர்ந்ததனிப்
பாவை யெனவந்த பண்ணாருந்--தேமொழியாம்
இன்றுணையை யான்பிரிந் தேங்கித் தவிக்குங்கால்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—த. செந்தமிழ்ச்செல்வி, திருச்செங்

★

ஒன்றுமுளத் தோரிருவ ருண்மகிழ்தற் கோதனந்தார்
குன்றிமனங் கூசுதுயர் கொள்ளுதற்கோ--தென்மலயக்
குன்றுதித்து மென்மலரின் கொங்குமணங் கொண்டுமெல்லத்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—கு. ப. தாயுமானசாமி, அய்யம்புதூர்.

★

மாலையிட்ட நாதன் மரித்தார் விதவையென்றார்
ஆலையிட்ட செங்கரும்பாய் அல்லலுற்றேன்--வாலையுள்ளம்
என்றறிவார் நாட்டாரென் றேங்கும் எனதருகில்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—மு. தங்கவேலு, தலைமை ஆசிரியர், கிழக்கல்பூண்டி.

★

அன்பர் எனைப்பிரிந்தார் ! அற்றம் அதையறிந்து
இன்ப நிலவும் இசைக்குயிலும்--அன்பின்றி
என்றன் உளம்வருந்த ஏந்திழைநான் ஏக்கமுற்றேன்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—வித்துவான் இல. அரவரசன், இராமநாதபுரம்.

★

ஈத்துவக்கும் இன்பம் அறியா அறிவிலிகள்
நாத்திகரென் றெம்மை நவில்கின்றார்--சாத்துவிகம்
என்று சதிசெய்வார் ஆட்சியில் ; செந்தமிழ்சேர்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—கரு. சுப்பிரமணியன், பாகனேரி.

★

பாடல் சிறந்த புலவர்க ளக்காலம்
ஊடலைத் தீர்த்தார் ; அவர்போன்று--தேடுதல்
ஒன்னு(து) எனநீயும் ஓர்ந்துதான் வந்தனையோ ?
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—மங்கலவாணன், திருமங்கலம்.

★

செக்கிழுக்கும் மாடாகச் சிந்தைமிக நொந்துழைக்கும்
மக்கள் மனங்குளிர வைப்பதற்கா ? சக்திமிகு
இன்றமிழ்ப் பாவல்லோர் இன்கவிகள் பாடுதற்கா ?
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—சிரான், கோம்பை.

★

தாயின் முகங்காணுஞ் சேயெனஎன் உள்ளத்தில்
ஆயிரம் எண்ணம் அலைத்திட--ஞாயிறு
சென்றொழிந்துத் திங்கள் சிரித்திடத் தாமதமாய்த்
தென்றலே யேன்வந்தாய் செப்பு.
—இரெ. தங்கையா பி.ஏ., பெரியநாயக்கன்பாளையம்.

◐ பரிசுபெற்ற வெண்பா—பரிசு, ஓராண்டு 'தென்றல்' சந்தா.

# கழகச் செய்திகள்

## வேலூர்

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு 26-6-55 காலை 10 மணிக்கு வேலூர் நகர சபையில் ஒரு வரவேற்பு நடத்தப்பட்டது. கூட்டத்திற்கு நகரசபைத் தலைவர் தோழர் சீதாபதி அவர்கள் தலைமை வகித்து பொதுச்செயலாளர் அவர்களுக்கு வரவேற்பிதழ் வாசித்தளித்தார். வரவேற்புக்கு நன்றி சொல்லும் முகத்தான் பொதுச் செயலாளர் பேசுகையில் "எந்தக் கட்சியினராயினும், அவர்களுக்கு நகரசபைகளில் வரவேற்பளிக்கும் ஜனநாயகப் பண்பு வேலூர் நகர சபையில் வளர்ந்திருப்பது குறித்து மகிழ்கிறேன். தமிழ் பெரியார் திரு. வி. க. அவர்களுக்கு எல்லாக் கட்சியினரும் மதிப்பளித்ததற்குக் காரணமே, அவர், கருத்துவேற்றுமைக்கு மதிப்பளிக்க வேண்டுமென்று போகுமிடமெங்கும் கூறியதும், தானும் அதைமேற்கொண்டதும்தான் அத்தகைய உயர்பண்புதான், அவரது மரண ஊர்வலத்தில் எல்லாக் கட்சியினரையும் கொடியேந்தி நடக்கவைத்தது. அந்தப் பண்பு இந்நாட்டில் இன்னும் வளர வேண்டும். நகரசபைகளில் கட்சிப் பாகுபாடே இருக்கக்கூடாது. கட்சிப் பாகுபாடு, காரசாரமான வாதம் சட்ட மன்றங்களிலே இருந்தால் அதில் நியாயமுண்டு; நகரசபைகள் சட்ட மன்றங்களல்ல; அரசியலாரால் ஆக்கப்பட்ட சட்டங்களைக் கொண்டு நாட்டுமக்களுக்கு தேவையான நலன்களைச் செய்துதரவேண்டிய நகர்மன்றங்களில் கட்சி வேறுபாடு தேவையில்லைதான்" என்று விளக்கமாகப் பேசி, இறுதியில் பொதுச்செயலாளர், வரவேற்புக்கு தன் இதயங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டார். வரவேற்பு வைபவத்தில் பலதரப்பட்ட கட்சியினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

★

பிற்பகல் 3 மணிக்கு வேலூர் டவுன் ஹாலில் வடாற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாவட்ட உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு தோழர்கள் முல்லைசத்தி, எ. எல். சி. கிருஷ்ணசாமி, ப. உ. சண்முகம், போளூர் சுப்ரமணியம், முல்லை-வடிவேலு, க. நெடுஞ்சோழன், பசூல், சம்பங்கி, சாரதி, கருத்தோவியன், சிவானந்தம், வில்வம், திருப்பத்தூர் நடேசன், சுப்பராயன் உள்ளடங்க பெரும்பான்மையான மாவட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். பொதுச் செயலாளர் நெடுஞ்செழியன் அவர்கள் கழகத்தின் எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும், நடக்கவிருக்கும் இரண்டாவது மாநில மாநாட்டின் வெற்றிக்கு கழகத் தோழர்கள் பணியாற்ற வேண்டிய வழிமுறைகள் பற்றியும் நீண்டதோர் உரை நிகழ்த்தினர். மாலை 6-30 மணிக்கு மாவட்ட உறுப்பினர்கள் கூட்டம் முடிவுற்றது.

★

மாலை 7 மணிக்கு வடாற்காடு மாவட்ட தி. மு. கழகத்தின் சார்பில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு வேலூர் கோட்டை வெளி மைதானத்தில் ஒருபாராட்டுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடாற்காடு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் முல்லை-சத்தி தலைமை வகித்தார். மாவட்டத்தின் சார்பாகவும் பல கிளைக்கழகங்கள் சார்பிலும் பொதுச்செயலாளருக்கு மலர்மாலைகளும் கைத்தறித் துணிகளும் அணிவிக்கப்பட்டன. தோழர்கள் க. அறிவழகன், எ. எல். சி. கிருஷ்ணசாமி, போளூர் சுப்ரமணியம், ப. உ. சண்முகம் ஆகியோர் பேசினார்கள். இறுதியாக பொதுச் செயலாளர் பாராட்டுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, அரசியல், சமுதாயம், பொருளாதாரம் ஆகியவை பற்றி நீண்டதோர் விளக்கவுரை தந்தார். நகர இந்துமகா சபையைச் சேர்ந்தவர்கள் அச்சிட்டுவெளியிட்டிருந்தகேள்வித்தாளுக்குஅவர்கள் விளங்கிக்கொள்ளும் வகையில் அறிவுரை தந்தார். கூட்டத்தில் உண்டியல்மூலம் வசூலான ரூ 35 மாநில மாநாட்டு நிதிக்காக நகர தி. மு. க. செயலாளர் கிருஷ்ணன் (திராவிடன் பதிப்பகம்) அவர்களால் பொதுச்செயலாளர் அவர்களிடம் தரப்பட்டது. தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9-30 மணிக்குகூட்டம் இனிது முடிந்தது.

★

## பெங்களூர்

பெங்களூர் மாவட்ட தி.மு.கழகக் கிளைகளின் தேர்தல் போன திங்கள் இரண்டாவது வாரத்தில் சிறப்புற நடைபெற்றது. தோழர் வ. டி. பிரான்சிஸ் மாவட்டச் செயலாளராகவும், தோழர் சோழன் துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். தி. மு. கழகத்தின் நாட்டுப் பிரிவினையை, கன்னடத்தார் ஆதரிப்பரா என்று கேலி பேசும் மாற்றுக் கட்சிக்காரர்கள் அச்சமுறத் தக்க வகையிலேயும், தி. மு. கழகத்தலைவர்கள் மகிழ்வுறத் தக்க வகையிலேயும் கன்னட நாட்டின் இதயமாக விளங்கும்பெங்களூரில் தி. மு. கழகம் வேரூன்றி விட்டது. தி. மு. கழகத்தின் சாதாரணப் பொதுக்கூட்டங்களுக்கு மக்கள் திரள், திரளாக வருகிறார்களென்றால், கர்நாடகப் பகுதியின் தி. மு. க. மாநாட்டில் எவ்வளவு பேர் கலந்துகொண்டிருப்பார்கள்! வெளியூர்களிலிருந்து மாதம் ஒரு பேச்சாளரை அழைத்து வந்து பொதுக்கூட்டம் நடத்துகின்ற அளவுக்கு தி. மு. கழகம், பெங்களூர் மாவட்டத்திலும், பெங்களூர் நகரிலும் வலுப்பெற்றிருக்கிறது. கன்னடப் பகுதியின் இந்த விழிப்புணர்ச்சி தி. மு. கழகத்தின் வெற்றிக்கு நல்லதோர் சான்றாகும். பொதுச்செயலாளர் அவர்களுக்கு பெங்களூரிலிருந்து அழைப்பு விடுத்திருக்கிறார்கள். பொதுச்செயலாளர் அவர்களும் விரைவிலே பெங்களூர் செல்ல இருக்கிறார்கள்.

—விசேட நிருபர்

### திருச்சி மாவட்ட தி. மு. கழக கிளைச் செயலாளர்கட்கு

## வேண்டுகோள்

அன்புடையீர்!

வணக்கம். மாநிலமாநாட்டுக்கு நமது மாவட்டப் பங்கு ரூபாய் இரண்டாயிரத்துக்கு 19-6-55 ல் பொதுச்செயலாளரிடம் திருச்சியில் கொடுத்த ரூ. 1600-0-0 வேலாயுதம் பாளையம் பொதுக் கூட்டத்தில் கொடுத்த ரூ. 101 ஆக ரூ. 1701 போக மீத ரூபாயை இரண்டு வாரத்தில் கொடுப்பதாக உறுதி அளித்துள்ளோம்.

எனவே, தங்கள் பங்கை அனுப்பாத கிளைக்கழகங்கள் உடனே மாவட்டப் பொருளாளர் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டுகிறேன்.

அ. பெ. தர்மலிங்கம்
செயலாளர் திருச்சி.

★

### திருச்சி மாவட்ட

## தி. மு. கழக செயற்குழுக் கூட்டம்


நாளது 3-7-55 ஞாயிறு பிற்பகல் 2 மணிக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் துறையூர் தி. மு. கழக அலுவலகத்தில் நடைபெறும். அனைவரும் தவறாது வரவேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் :—

1. மாநில மாநாட்டு நிதி
2. வரவு செலவு
3. வட்டக்குழு அமைப்பு.

அன்பன்
அ. பெ தர்மலிங்கம்
செயலாளர் திருச்சி,

## ஆசிரியத் தோழருக்கு..



பிரிய நண்ப,

வணக்கம். 'தென்றல்' வார இதழுக்கு ஓராண்டு வெற்றிகரமாக நிறைவுற்றதை அறிந்து மகிழ்கிறேன். 'தென்றல்' இரண்டாவது ஆண்டில் மேலும் நல்ல கவனிப்பையும் சிறப்பையும் பெறும் என நம்புகிறேன். வாழ்த்துக்கள்...'ராஜ தண்டனை' நாடகத்தின் முன்னுரை நன்றாக இருக்கிறது.

அன்பு,
வல்லிக்கண்ணன்,
சென்னை 5.

★

ஆசிரியர் அவர்களுக்கு

வணக்கம். 'தென்றல்' முதலாண்டு கடந்து இரண்டாவதாண்டு தனது பணியினைத் தொடங்கியிருப்பது குறித்து பெரிதும் மகிழ்கிறேன். இன்னும் புதுப்புது அங்கங்களை தென்றலில் சேர்க்கும்படி தங்களைக் கேட்டுக்கொள்வதோடு கழகச் சொற்பொழிவாளர்களின் சொற்பொழிவுகளையும் சுருக்கித் தந்தால் நலமென நினைக்கிறேன்.

அன்புள்ள,
எஸ். ராமசாமி,
திண்டுக்கல்.

## பன்மலர்ச் செண்டு

உடற்பயிற்சி என்பது பைனற்றது. நீ திடகாத்திரனாயிருந்தால் உனக்குத் தேவையிலாதது; உடல் நலிவுடனிருந்தால் நீ செய்யக் கூடாதது.

—ஹென்ரி போர்ட்

நினைத்தவுடனே ஒரு காரியத்தைச் செய்; அதைப்பற்றிப் பேசாதே. எல்லா முயற்சிகளிலும் வெற்றிபெற இதுதான் சிறந்த வழி. பேச்சு தர்க்கமாகி, தர்க்கம் கோபத்தை உண்டாக்கி, கோபம் எதிர்ப்பைச் சிருஷ்டித்து, நீ காரிய மாற்றியது சரியேயாயினும் தவறேயாயினும், எப்போதும் எதிர்ப்பு இடையூறைத்தான் விளைவிக்கும்.

—சாரா கிராண்ட்

நாற்பது வயது வாலிபத்தின் முதுமை; ஐம்பது வயது முதுமையின் இளமை.

—விக்டர் ஹ்யூகோ

முடிவேயிலாத ஒரு போர் உலகின்கண் இருந்து வருகிறது. அது தான் ஆண்பாலும் [illegible] பெண்பாலும் [illegible] நடந்து வரும் போர். [illegible] முடிவுறாது நிகழ்ந்து வருவதற்குக் காரணம் விரோதிகளிடையே தொடர்ந்து இணக்கம் இருந்து வருதலே.

—"பர்மிங்ஹாம் ஈவினிங் டெலிகிராப்"

கல்யாணமாகாதவர்கள் கல்யாணம் செய்துகொண்ட ஆண்களைவிட அதிகமாகப் பெண்களைப்பற்றித் தெரிந்து கொண்டுள்ளார்கள். அவ்வளவு தெரிந்திராவிட்டால், அவர்களும் திருமணமே செய்துகொண்டிருப்பார்கள்.

—யாரோ

நல்ல பத்திரிகையாளனென்போன் முதலில் கதை புனைபவனாகவும், பின்னர் அதன் பக்கம் உண்மையை வலைபோட்டிழுப்பவனாகவும் இருப்பவனே.

பீடர் உஸ்டினேவ்

கத்தியை உபயோகிக்காமலே எதிராளியின் கழுத்தை அறுத்திடும் கலையே இராஜதந்திரம் எனப்படுவது.

—பெரில் ஸ்னேடர்

தன் உள்ளக்கண்களுக்கு ஒற்றைக் கண்ணாடி அணிவித்து உலகின்மீது பார்வை செலுத்துபவனே ஜனவிரோதியாகின்றான்.

—பாப் ஆண்ட்ரூஸ்

### பாண்டியன் விளையாட்டு மன்றம்

## ஆண்டு விழா

சென்னை எழும்பூர் 9வது வட்டம், போர்ச்கீஸ் சர்ச் தெரு பாரக்ஸ் மைதானத்தில் 1-7-55, வெள்ளி மாலை 6 மணிக்கு தோழர் வி. முனுசாமி அவர்கள் தலைமையில், பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பும், அறிஞர் அண்ணா அவர்களுக்கு பாராட்டும் வழங்கப்படும். இவ்விழாவினை சிறப்பிக்க அனைவரும் கலந்துகொள்ளுமாறு கோருகிறோம்.

9-வது மாவட்ட
தி. மு. க. சென்னை.

Edited and Published by Kannadasan, 2/127, Mount Road, Madras-6. Printed by E. M. Kanagasabapathy at Elangovan Printers, 28, Muthu Mudali St., Madras-14.